JAN. '50

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

-4-

கண்ணன்

பொருளடக்கம்

குழந்தைகளே! .. .. பக்கம் 2

கண்ணன் பிறந்தான் - 'சுரபி' 3

தீராத விளையாட்டுப் பிள்ளை 5

மந்தியம்மா - 'ஜோதி மாமா' 6

ஜக்கு - பட்டணம் போகிறான் - 'ஆர்வி' 8

ரெயில் பரிசு 15

நம்முடைய நேரு - கி. வா. ஜகந்நாதன் 16

மாயாபுரி நீலவேணி - ரமணன் 21

ஒட்டுப் படம் - மூவர்ணப் படம் 29

ஆட்டுப் புலி - சோமசன்மா 33

பனி நிலச் சிறுவர் - ச. கு. கணபதி ஐயர் 37

நான் பெரியவனானால் - படங்கள் 41

பவழவல்லி - கி. ரா. 45

பொம்மை மனுஷன் 50

கண்ணன் கழகம் 51

...மர்த்து மைனா - தி. ஜ. ர. 52

...தை படேல் 57

... பாக்கி ... தம்பி' ..

2/11/75
சென்னை-600 008

...தைகளே!

எங்கள் வீட்டில் நரசிம்மன் என்று ஒரு குழந்தை இருக்கிறான். எப்போதும் துறுதுறுவென்று இருப்பான். கதை என்றால் அவனுக்கு ஆவல். சதா ஏதாவது கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பான். “இது என்ன? அது ஏன் அப்படி இருக்கிறது? இது எப்படி?” என்றெல்லாம் அம்மாவைக் கேள்வி கேட்பான். அவனுக்கு அம்மா கதைகளைச் சொல்வாள். தனக்குத் தெரிந்த பதிலைச் சொல்வாள். கதை சொன்னால் கேட்டு விட்டுத் தூங்கினால்தானே? “ஹூம்! இன்னொரு கதை சொல்லு” என்று மறுபடியும் கேட்பான்.

நரசிம்மனுடைய அம்மா தனக்குத் தெரிந்த கதைகளையெல்லாம் சொன்னாள். மறுபடியும் அந்தக் கதைகளையே சொன்னால், “புதுக் கதை சொல் அம்மா!” என்று தொந்தரவு படுத்துவான். அவனுடைய அப்பா வெளியூரில் உத்தியோகமாக இருந்தார். அம்மா அவருக்கு எழுதினாள். “உங்கள் பிள்ளை படிக்கும்படி கதைப் புத்தகம் வாங்கி அனுப்புங்கள்” என்று எழுதினாள். கதைப் புத்தகங்கள் வந்தன. வேறு புத்தகங்களும் வந்தன. ஆனால் எல்லாம் இங்கிலீஷ்.

...‘என்ன அழகு!

இல்லையே!” என்று அப்போ...
நினைத்தேன். “ஒரு பத்திரி...
போட்டு, குழந்தைகளுக்கு...
கதை சொல்லலாமே. அழக...
காகப் படம் போடலாமே...
வர்ணத்திலே குருவி, மை...
எல்லாம் போட்டுக் காட்...
லாமே” என்று எண்ணினே...
அந்த எண்ணந்தான் ‘க...
ணன’ வெளிவரக் காரணம்...

உங்களுக்குக் கதை என்...
நரசிம்மனைப்போல அதிக...
பிரியம் அல்லவா? ‘கண்ண...
உங்களுக்கு விதவிதமான க...
களைச் சொல்வான். க...
கதைகளைச் சொல்...
மாக நடந்த க...
சொல்வான். பெரிய...
களின் கதையையும...
வான். உலகத்திலே எ...
தனையோ தேசங்கள் உண்...
அவைகளைப் பற்றிப் பட...
போட்டுக் காட்டிச் சொ...
வான். பட்சிகளைப் பற்றி, மிரு...
கங்களைப்பற்றி, அற்புதமான
சமாசாரங்களை வேடிக்...
வேடிக்கையாக எடுத்துரை...
பான். விளையாட்டு, பாட்டு...
குறும்பு எல்லாம்...
ணிடம் காணலாம்...

சரி, சரி: நா...
லாம் வளர்த்...
களே ‘கண...
விளையாடித்...
ளுங்க...

21775

கண்ணன் பிறந்தான்!

'சுரபி'

கண்ணன் பிறந்தான் — கலை
வண்ணன் பிறந்தான் — வெள்ளைக்
கஞ்ச மலர் வளர் வஞ்சிக் கொடியினில்
பண்பை வளர்க்க — இந்த
மண்ணை விளக்க — நவ
பாரதி கங்கை பிறந்திடும் வேளையில் (கண்)

* * *

பாலும் பழமும் — வண்ணச்
சோலை மலரும் — கொண்டு
ஞ்ச வர்ணக் கிளி கொஞ்சி வந்தாலெனப்
ாலரை நாடி — வர்ண
ஜாலங்கள் சூடி — சுவைப்
பாகு மொழிகளைத் தூவியே வந்தனன் (கண்)

* * *

வட்ட மதியும் — நல்ல
கட்டிக் கரும்பும் — இன்பம்
வாரி வரும் பண்ணும் வளரும் மழலையில்
குட்டிக் கதைகள் — மனங்
தட்டும் உரைகள் — தமிழ்
கொஞ்சிடும் பாடல்கள் நெஞ்சில் விதைத்திடக் (கண்)

மாமி கொடுத்தாள் — தங்கை
காமு எடுத்தாள் — அங்கே
மஞ்சுவும் பஞ்சுவும் கெஞ்சியே வந்தனர்
சோமு விரித்தான் — அண்ணன்
ராமு படித்தான் — கண்ணன்
சொல்லினில் யாவரும் சொக்கிக் கிடந்தனர் (கண்)

* * *

ஏட்டை மடித்தான் — ஒரு
பாட்டை எடுத்தான் — உடன்
எம்பிக் குதித்தனர் தும்பி சுழன்றனர்
கேட்டவர் காதில் — கிண்டல்
வேட்டொன்று போட்டான் — எல்லாங்
கெக்கலி கொட்டியே கேலிச் சிரித்தனர் (கண்)

* * *

போட்டிக்கு அங்கே — சேஷிப்
பாட்டியும் வந்தாள் — இந்தா
பொக்கை வாயிற்கொரு கக்கண்டு என்றதை
நீட்டினன் சோமு — கையை
நீட்டினள் பாட்டி — எல்லாம்
நெட்டித் தலை முட்டிக் கட்டிப் புரண்டனர் (க

* * *

கொஞ்சுவ தேனோ — கொஞ்சிக்
கெஞ்சுவதேனோ — உங்கள்
சொந்தக் கண்ணன் தரும் செந்தமிழ் வெண்ணெய்க்கு
பஞ்சமிங் கில்லை — ரேஷன்
கஞ்சரிங் கில்லை — கண்ணன்
பாடி எல்லாரையுங் தேடி வருகுவன் (க

தீராத விளையாட்டுப் பிள்ளை

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்.
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை
—பாரதியார்.

மந்தி

'ஜோதி'

வாலை வாலை நீட்டிக்கொண்டு
வாயை வாயை மென்றுகொண்டு
காலைக் காலைத் தூக்கிவைத்துக்
கலகல சலங்கை கட்டிக்கொண்டு
எங்கே போகிறாய் மந்தியம்மா?
எப்போது வருவாய் மந்தியம்மா?
அம்மா வீட்டுக்குப் போகிறேன்நான்
அப்பா வீட்டுக்குப் போகிறேன்நான்
சும்மா படுத்துத் தூங்கின படியே
சுகம்பெற அங்கே போகிறேன்நான்.
அங்கே போனால் ஆனந்தம்
ஆனந் தம்பே ரானந்தம்!
வேலை வெட்டி செய்வாயோ?
விருந்து சமைத்துப் படைப்பாயோ?
வாலைச் சுருட்டி நடப்பாயோ?
மாமி யாரை நினைப்பாயோ?
எங்கே போகிறாய் மந்தியம்மா?
எப்போது வருவாய் மந்தியம்மா

யம்மா

மாமா'

வேலை செய்ய ஆள்உண்டு
விருந்து சமைக்க ஆள்உண்டு.
மூலையில் குந்திக் கிடக்கும்இந்த
மூளியை எதற்கு நினைப்பேன்நான் ?
அங்கே போனால் ஆனந்தம்
ஆனந் தம்பே ரானந்தம் !
புருசனை நினைக்க மாட்டாயோ ?
புக்கக நினைவும் வாராதோ ?
வரிசை வரிசை யாயுள்ள
மைத்துனன் மாரை நினைப்பாயோ ?
எங்கே போகிறாய் மந்தியம்மா ?
எப்போது வருவாய் மந்தியம்மா ?
அங்கே வந்தால் அகமுடையான் ;
அல்லா விட்டால் ஆரோதான் !
இங்கே இருக்கும் பிடுங்கல்களை
எல்லாம் மறந்து வாழ்வேனே !
அங்கே போனால் ஆனந்தம்
ஆனந் தம்பே ரானந்தம் !

ஜக்கு

'ஆர்வி'

பட்டணம் போகிறான்

"டேய், அதோ வராண்டா ஜக்கு!" என்று மணி கூச்சல் போட்டான். "ஆமாண்டா, ஜக்குதாண்டா!" என்றான் சீதாராமன். உடனே அங்கிருந்த ஐந்தாறு பையன்களும் 'ஹொஹ்ஹோ' என்று கைதட்டிச் சிரித்தார்கள்.

ஜக்கு தேரடித் தெருவைத் தாண்டி இந்த முடுக்குத் தெருவுக்கு வராமலே போய்விடத்தான் நினைத்தான். அங்கே தெருவில் ரோடுக்குக் கப்பி போட்டுக்கொண்டிருந்தார்கள். பெரிய ரோலர் எஞ்சின் ஒன்று குறுக்கும் நெடுக்குமாகப் போய்க்கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டேயிருந்த ஜக்குவுக்கு அந்த எஞ்சின் டிரைவரைப் போகச் சொல்லிவிட்டு, தான் ஏறி உட்கார்ந்துகொள்ள வேண்டும் போலிருந்தது. ஆனால் அது எப்படி முடியும்? இதைப் பார்த்துக்கொண்டே முடுக்குத் தெருவுக்குள் வந்துவிட்டான். அவன் பள்ளிக்கூடப் பையன்கள் கண்ணிலும் பட்டுவிட்டான். இனிமேல் எப்படி அவர்களைப் பார்க்காமல் போவது என்று அவர்கள் இருக்குமிடத்துக்குத் தைரியமாய் வந்துவிட்டான்.

"டேய், ஜக்கு! உன்னை இன்னிக்குப் பட்டணத்திலே பார்த்தேனே!" என்றான் மணி கிண்டலாக.

"எக்ஸிபிஷன் வாசல்லே டிக்கட்டுக்கூட வாங்கினியே!" என்றான் சீதாராமன்.

எல்லாப் பையன்களும் கொல்லென்று சிரித்தார்கள். ஜக்கு அவர்களிடமெல்லாம் முதல் நாள் காலையில் ஜம்பமடித்து வைத்திருந்தான். "அடேய், பாருங்கடா! இன்னி ராத்திரி எங்கப்பாவோடே மெட்ராஸ் போகப்போகிறேன். இந்த லீவு முழுக்க அங்கேதான் இருக்கப் போறேன்" என்று புருடா விட்டிருந்தான்.

ஆனால் அன்றிரவு அவனுடைய அப்பா பட்டணம் கிளம்பும்போது ஜக்குவைப் பார்த்து, "சீச்சீ! இன்னும் ஒரு வாரத்திலே பள்ளிக்கூடம் திறக்கப்போறு! நீ எதுக்கடா அங்கே? போ - போ!" என்று சொல்லிவிட்டு அவர் மட்டு[ம்] புறப்பட்டுப் போய்விட்டா[ர்.]

ஜக்குவுக்கு ஆத்திரம் [ஒரு] பக்கம்; அவமான[ம் ...]

பக்கம். நாளைக்குப் போது விடிந்தால் மற்றப் பையன்கள் கண்ணில் பட்டால் அதை விட அவமானம் வேறென்ன வேண்டும்? அதனால் காலை முதல் வீட்டை விட்டு வெளியில் கிளம்பாமலே இருந்தான். ஆனால் அம்மா சும்மா இருக்கப் படாதா? தேரடிக் கடைக்குப் போய் இரண்டு தேங்காய் வாங்கிக்கொண்டு வரச் சொல்லி, கையில் எட்டணாவைக் கொடுத்து அனுப்பினாள்.

ஜக்கு இப்படி வேறு வழி இல்லாமல் வந்து இவர்களிடம் மாட்டிக்கொண்டு விட்டான். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "வாயை மூடுங்கடா! என்னை மட்டும் இன்னிக்கு ராத்திரி தனியா வரச் சொல் லிட்டு அப்பா போயிருக்கார். தெரியுமாடா, பட்டிக்காடுகளா?" என்று வீறாப்பாகக் கூறினான்.

"இருந்தாலும் இருக்கும்" என்றான் சுப்புணி. அவனுக்கு ஜக்குவிடம் பயம். தனியாக ஆற்றங்கரைக்குப் போனால் அவன் கண்ணில் படாமல் இருக்க முடியாது. சுப்புணி சொன்னதைக் கேட்டதும் மற்றப் பையன்களும் அதை ஒப்புக்கொண்டார்கள்.

"உனக்கென்ன ...ரப்பா! பட்டணமெல் ... போய், சுத்திப் ...போறே!" என் ...ராமன்.

"எங்கேடா, எல்லாத்தையும் போய் சுத்திப் பார்க்கப் போறேன். எக்ஸிபிஷன் போவேன், பார்க் போவேன். பீச்சுக்குப் போவேன். ஜூவுக்குப் போவேன். ஹார்பருக்குப் போய் எங்கப்பாவோடே 'ஜல உஷா' கப்பல்லே ஏறிப் பார்ப்பேன். அந்தக் கப்பல் காப்டன் எங்கப்பாவோடே படிச்சவராம். சும்மா ஒரு மைல் இரண்டு மைல் சமுத்திரத்திலே போகச் சொல்லி, போயிட்டு வருவேன். அங்கே மோட்டார் படகு இருக்காம். அதிலே ஏறி ஹார்பரை ஒரு சுத்து சுத்துவேன். அவ்வளவுதான்!" என்று ஜக்கு அடுக்கடுக்காய்ச் சரடு விட்டுக் கொண்டே போனான்.

பிறகு, "அட நேரமாயிடுத்தே. நான் போயிட்டு ஏழு மணி வண்டிக்குக் கிளம்பணுமே!" என்று அவர்களிடம் சொல்லிவிட்டு ஜக்கு மெதுவாக நழுவினான்.

"டேய், உன்னை ஸ்டேஷன்லே வந்து பாக்கறேன்

டோய்!" என்று அவன் காதில் விழும்படி கூவினான் மணி.

"ரைட்!" என்றான் ஜக்கு.

இப்படிச் சொல்லிவிட்டுப் போனானே யொழிய ஜக்குவுக்குப் பிறகுதான் பெரிய யோசனையாகப் போய்விட்டது. 'என்னடா செய்வது? இப்படிச் சொல்லிவிட்டோமே' என்று மண்டையைக் கலக்கிக்கொண்டான்.

ஜக்கு தேங்காய் வாங்குவதையே மறந்துவிட்டான். தெருக் கோடியில் அடுத்த வீட்டு அம்புலு நின்றுகொண்டிருந்தாள். திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு அவளைக் கூப்பிட்டு, "அடி அம்புலு! சட்டுனு ஓடிப்போய் ஒரு பேப்பரும் பென்சிலும் எடுத்துண்டு வா! சட்டுனு வரலை, அப்புறம் பார்த்துக்கோ!" என்று மிரட்டினான்.

"என்னடா, ரொம்பத்தான் அதிகாரம் பண்றியோ! மூஞ்சியைப் பாரு!" என்று சொல்லிவிட்டு அம்புலு தன் வீட்டுக்குள் ஓடினாள். ஆனால் சற்றைக்கெல்லாம் அவனிடம் வந்து, "அம்புலுன்னு கூப்பிட்டா போறாதோ? அடின்னு வேறே கூப்பிடணுமோ? போனாப் போறது, பாவம்னு கொண்டு வந்தேன் தெரியுமா?" என்று பேப்பரையும் பென்சிலையும் அவனிடம் கொடுத்தாள்.

ஜக்கு ஒரு மூலையாகச் சென்று என்னவோ அவசர அவசரமாக அதில் எழுதினான். பிறகு அதை நன்றாக மடித்தான். "அடி அம்புலு! இந்தா, இன்னும் அரை மணி கழிச்சு இந்தக் கடிதாசைக் கொண்டு போய் எங்கம்மாவிடம் கொடுக்கணும். தெரியுமா? நான் ஒளிஞ்சிண்டு பார்ப்பேன். நீ அதைப் பிரிச்சு கிரிச்சுப் படிச்சயோ, அப்புறம் பார்த்துக்கோ!" என்று அதைக் கொடுத்துவிட்டுக் கையில் இருந்த எட்டணாவுடன் அந்தத் தெருவை விட்டு மறைந்தான்.

அம்புலு அவன் தலை மறைந்ததும் அதை மெதுவாகப் பிரித்து எழுத்துக் கூட்டி வாசித்தாள்: "அம்மா! என்னைத் தேடாதே. நான் திரும்பி வர நாலு நாள் ஆகும் - ஜக்கு."

அம்புலு விழித்தாள். 'பாரேன் இவனுடைய தைரியத்தை! நாலு நாள் ஆகுமாமே திரும்பிவர!' என்று எண்ணிக்கொண்டே ஜக்குவின் அம்மாவிடம் கொடுக்க ஓட்டமாய் ஓடினாள்.

ஜக்கு ஓட்டமும் நடையுமாக ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஓடினான். அவன் எண்ணம், அடுத்த ஊரில் இருக்கும் அத்தை வீட்டுக்காவது போய் நாலு நாள் கண் மறைவாக இருந்துவிட்டு வந்துவிடுவது என்பதுதான். அங்கே போக மூன்று அணாதான் டிக்கட்டு சார்ஜ். அது போனால் பாக்கி கையில் ஐந்தணா இருக்கும். பசி எடுத்தால் பார்த்துக் கொள்ளலாம். இரண்டு [illegible] வுக்கு இரண்டு வடை [illegible] தின்றால் கூடப் [illegible]

அதற்குமேல் ஒரு டம்ளர் ஜலம்! அடேயப்பா! வயிறு நிறைந்துவிடுமே!

ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்த பிறகு அங்கே அவனுக்கு ஒரு புது யோசனை தோன்றியது. வண்டி வர இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது. பத்து மைல்தானே! நடந்தே போய்விடலாமே!

"உம்; அதுதான் சரி!" என்று ரெயில்வே லயனோடு நடக்க ஆரம்பித்தான். நடக்க நடக்க வழி நீண்டு போய்க் கொண்டேயிருந்தது. அடுத்த ஸ்டேஷன் வந்தது. அப்பொழுதும் அங்கே வண்டி வர ஒரு மணி ஆகும். அதற்குள் ஊரிலிருந்து யாராவது தேடிக் கொண்டு வந்துவிட்டால், அது ஆபத்துதானே என்று மறுபடியும் நடக்க ஆரம்பித்தான். இன்னொரு ஸ்டேஷனும் வந்தது. அதற்கு அடுத்ததுதான் அத்தை ஊர். இதற்குள் இருட்டி வெகு நேரமாகிவிட்டது. அத்தை ஊருக்கருகில் ஒரு பெரிய ஆற்றுப்பாலம் இருக்கிறது என்று அவனுக்குத் தெரியும். வர வர மனசில் பயம் மூண்ட ஆரம்பித்தது. இருட்டில், தூரத்தில் குத்துக் குத்தாய் நின்ற கருக மரமெல்லாம் குட்டிப் பிசாசு உட்கார்ந்திருப்பதுபோல இருந்தது. திரும்பிப் பார்த்தால் திக், திக்கென்றது! தூரத்தில் ரெயில்வே லயனில் சிவப்பாய் ஒரு விளக்குத் தெரியவே அதையே பார்த்துக்கொண்டு ஜக்கு நடந்தான். உடம்பெல்லாம் 'குப்'பென்று வேர்த்துப் போயிற்று. நடந்து நடந்து கால்வலி வேறே. தனியாய் மொட்டு மொட்டு என்று நடக்கவே பயம். அதனால் "என்னை யாரென்று எண்ணினாய், பயலே" என்ற ஒரு பாட்டின் அடியை எடுத்துத் திருப்பித் திருப்பிப் பாடிக்கொண்டே சிவப்பு விளக்கைப் பார்த்தபடி நடந்தான். பக்கத்து வயல்களில் தவளைகள் 'கொடக் கொடக்' என்று கத்தின, ஏதோ பக்ஷிகள் சலசலத்தன. ஜக்கு நடையைக் கூடியமட்டிலும் வேகமாகவே போட்டு நடந்துகொண்டிருந்தான்.

சிவப்பு விளக்கு இருந்த இடம் கிட்டேவந்த பிறகுதான் தெரிந்தது. அதுதான் ஆற்றுப்பாலம்! ஒரு பர்லாங் அகலம் அந்த ஆறு. ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது. இல்லாவிட்டால் இறங்கிப் போகலாம். ரெயிலில் வராமல் போனோமே என்று இருந்தது அவனுக்கு. வரும் வழியில் வடைகூட வாங்கிக் கொள்ளாமல் வந்துவிட்டான். நல்ல பசி வேறே. என்ன செய்வது? நல்ல வேளையாக அந்தப் பாலத்தில் மனிதர்கள் நடக்க இரண்டு தண்டவாளத்துக்கு நடுவில் ஓரடி அகலத்தில் பலகை போட்டிருந்தது. அதன் வழியாக நடக்க ஆரம்பித்தான். பாதித் தூரங்கூட வரவில்லை. அப்போதுதான் அவன் நன்றாகக் கவனித்தான். பின்னாலிருந்து அவனைத் தாண்டி பளிச்சென்று வெளிச்சம் அடித்துக்கொண்டிருந்தது. கடகட,

கடகட என்று சத்தம்! 'வீல், வீல்' என்று ஊதல். ரெயில் வந்துகொண்டிருக்கிறது அவ னுக்கு இருந்த பிரமையில்

அவன் ஆற்றில் விழாமல் இருந் ததே நல்ல காலந்தான்! பேசாமல், ஒன்றும் தோன் றுமல் ஆணி அடித்ததுபோல்

நின்றுவிட்டான். வெகுநேரம் வரையில் என்ன நடந்தது என்றே அவனுக்குத் தெரியாது. கடைசியாக யாரோ அவனைத் தொட்டுக் கூப்பிட்டது தெரிந்தது. பார்த்தால் பாலத்துக்கு அருகில் ரெயில் நின்றிருந்தது. எஞ்சினிலிருந்த ஒருவன் கரித் துணியோடு இறங்கி வந்து, அவனைப் பிடித்து உலுக்கி, "தம்பி, யார் நீ?" என்று அதட்டினான்.

"நான்தான், சார்! எம் பேரு வந்து, சார், ஜக்கு சார், எம் பள்ளிக்கூடத்துப் பேரு, ஜகந்நாதன் சார்!" என்றான் ஜக்கு.

"அது சரி; இப்படித்தான் ரெயில் வர சமயத்துலே பாலத்துலே நிக்கறதோ?"

"வந்து சார்...வந்து..."

"பயப்படாதே ... சொல்லு! நானே உன்னை ரெயில்லே கொண்டுபோய் விடறேன், சொல்லு!"

ஜக்குவுக்கு ஏதோ ஒரு நம்பிக்கை வந்துவிட்டது. எப்படியோ ஒரு தைரியமும் உண்டாயிற்று. அதனால் யோசனையும் தோன்றியது.

"நான் பட்டணத்துக்குப் போகணும், சார். எங்கப்பாவோடே வந்தேன், சார். இறங்கி ஒரு ஸ்டேஷன்லே தண்ணி சாப்பிடறத்துக்குள்ளே எங்க அப்பா இருந்த வண்டி முன்னால் போயிடுத்து சார். நான் ஓடி வரதைப் பார்த்துட்டு எங்கப்பா, "அடே அடுத்த வண்டிலே வாடா! நான் போய் எக்மோர் ஸ்டேஷன்லே இருக்கேன்'னு இரைஞ்சு சொன்னார் சார். அதான் சார்!..." என்றான்.

அந்த எஞ்சின் ஆளுக்குப் பரிதாபமாகப் போய்விட்டது. ஜக்கு சொன்னதை நம்பவும் முடியவில்லை; நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. பார்த்தால் பத்துப் பன்னிரண்டு வயசுதான் இருக்கும். 'இவன் இப்படியெல்லாம் ஜோடித்துப் பொய் சொல்லப்போகிறானா, என்ன?' என்று பரிதாபப்பட்டு அவனை எஞ்சினிலேயே ஏற்றிக்கொண்டுவிட்டான்.

'போயும் போயும் அந்த ரோடு ரோலர் எஞ்சினிலே போகணும்னு ஆசைப்பட்டேனே. இப்போ நிஜ ரெயில் எஞ்சினிலேயே போகிறேனே!' என்று ஜக்கு ரொம்ப சந்தோஷப்பட்டுக் கொண்டான். மனசிலிருந்த பயம், கவலை எல்லாம் மறந்துவிட்டது அவனுக்கு! பசிகூட மறந்துவிட்டது. ஆனால் எஞ்சின் டிரைவருக்குப் பையன்கள் என்றால் உயிராம்! அவனுக்கு மூன்றும் பெண்குழந்தைகளாம். அதனால் ஜக்குவிடம் அலாதி அன்பு காட்டி அவனுக்குத் தன்னிடமிருந்த ரொட்டியும் டீயுங்கூடக் கொடுத்தான். அடுத்த ஜங்ஷன் வந்ததும் டிரைவர் அவனை அழைத்துக்கொண்டுபோய், கார்டு வண்டியில் படுத்துத் தூங்கும்படி சொல்லிவிட்டான். "எக்மோர் வந்தால் எழுந்திருக்கலாம். பேசாமல் தூங்கு!" என்று டிரைவர் சொன்னபோது ஜக்கு

வுக்கு ரொம்ப ஏமாற்றமாய் இருந்தது. நிஜ ரெயில் ஓட்ட அன்றைக்குள் கற்றுக் கொண்டு விடலாம் என்ற ஆசை வீணாகிவிட்டது. 'அட, அந்த ஊதலைத்தான் நாலைந்து தரம் அழுத்தி ஊதச் செய்தேனா?' என்று ஏக்கப்பட்டுக் கொண்டே தூங்கிப் போனான்.

"தம்பி, எழுந்திரு!" என்று யாரோ எழுப்பியதும் ஜக்கு வாரியடித்துக்கொண்டு தூக்கத்திலிருந்து விழித்தான். பொழுது விடிந்திருந்தது. ஜே, ஜே என்று கூட்டமும் சத்தமுமாய் இருந்தது. எழும்பூர் ஸ்டேஷன் இது என்று அவனுக்கு உடனே தெரிந்துவிட்டது. முதல் நாள் இரவில் தோன்றிய பயமெல்லாம் ஒரு நொடிக்குள் மறுபடியும் வந்து விட்டது!

"வா, உங்க அப்பா எங்கிருக்கிறார் காட்டு! உன்னைக் கொண்டு விட்டுவிடுகிறேன்!" என்றான் எஞ்சின் ஆள்.

ஜக்கு பேந்தப் பேந்த விழித்துக்கொண்டே அவனுடன் இறங்கிச் சென்றான். ஓரிடத்திலாவது அப்பாவைக் காணவில்லை. அவன் சொன்னது உண்மையாய் இருந்தாலல்லவா அப்பா அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பார்!

"ஒருவேளை நடுவிலேயே இறங்கி உனக்காகக் காத்திருப்பாரோ?" என்றான் எஞ்சின் ஆள்.

"ஆமாம், ஆமாம். அப்படித் தான் இருக்கும்!" என்றான் ஜக்கு.

அப்படிச் சொல்லி முடிக்கவில்லை! அதோ, எதிரே அவனைப் பார்த்துக் கொண்டே வேகமாய், கண்களில் தீப் பறக்க வருவது யார்? ஐயையோ, ஜக்குவின் அப்பாவே தான்!

ஜக்குவுக்குக் கால்கள் வெட வெடத்தன.

"அப்பா, தெரியாமல்... இனிமே இப்படிச் செய்யலே அப்பா!" என்று ஹோ என்று அழுதான் ஜக்கு.

"பிள்ளை தெரியாமல் செய்திடுச்சி. அடிக்காமே கூட்டிக் கிட்டுப் போங்க" என்று அனுப்பினான் எஞ்சின் ஆள்.

'நிஜமாகவே அப்பா எப்படி ஸ்டேஷனுக்கு வந்தார்?' என்று ஜக்கு ஆச்சரியப்பட்டான். அம்புலு அவனுடைய அம்மாவிடம் கடிதத்தைக் கொடுத்தாள். கூடவே மணி வந்து, 'ஜக்கு ஏழு மணி வண்டிக்குப் பட்டணம் போயிட்டானா?' என்று கேட்டான். அவனுடைய அம்மா பயந்து உடனே பட்டணத்திலிருந்த ஜக்குவின் அப்பாவுக்கு விவரமாய் அவசரத் தந்தி கொடுத்து விட்டாள். அதனால் வண்டி வருகிற சமயத்துக்கு ஜக்குவின் அப்பா ஸ்டேஷனுக்கு வந்து விட்டார். இதெல்லாம் ஜக்குவுக்குத் தெரியவே தெரியாது. எஞ்சின் டிரைவருக்கும் தெரியாது. எப்படித் தெரியும், நீங்கள்தான் சொல்லுங்களேன்!

ரெயில் பரிசு



● இதோ இந்த ஹார்ன்பி ரெயில் வண்டி உங்களுக்கு வேண்டுமா? இது நிஜமாகவே ஓடும். நீங்கள் இது வேண்டுமென்று ஆசைப்பட்டால், எங்கே, சொந்தமாய் ஒரு கதை எழுதி அனுப்புங்கள். அது மிகவும் நல்ல கதையாக இருந்தால், உங்களுக்கே இந்த ரெயில் பரிசு கிடைக்கும். பரிசு பெற்ற கதை 'கண்ண'னில் வெளியாகும்.

● கதை எழுதக்கூட வழி சொல்கிறேன்: கீழே உள்ள படத்தில் இருக்கிற பேர்களையும், பொருள்களையும் வைத்து அந்தக் கதையை எழுத வேண்டும். ஆமாம்! குதிரை, பல்லக்கு, இரண்டு மனிதர்கள், ஒரு பெண் — இவர்களை வைத்து எழுதுங்கள்.



● நிபந்தனைகள்:

(1) எழுதுகிறவர் கண்ணன் கழக அங்கத்தினராக இருக்க வேண்டும். (பக். 51)

(2) 7-முதல் 15-வயசுக்குள் இருப்பவர்களுக்கே இந்தப் பரிசு.

(3) உங்கள் அப்பாவோ அம்மாவோ வாத்தியாரோ உங்கள் வயசுக்கு அத்தாட்சி கொடுக்க வேண்டும்.

(4) கதை கிடைக்க வேண்டிய கடைசித் தேதி: 28-2-'50.

மேல்நாட்டு உடையில் குழந்தை நேரு.



இங்கிலாந்தில் படித்தபோது.

நம்முடைய நேரு

கி. வா. ஜகந்நாதன்

எங்கள் பாட்டி எனக்கு அடிக்கடி கதை சொல்வாள். ராமன் கதை, கிருஷ்ணன் கதை எல்லாம் சொல்வாள். "தசரத மகாராஜாவுக்கு மணி மணியாகக் குழந்தை பிறந்தார்கள். ரத்னம்போல ராமன் பிறந்தான்" என்று கதை சொல்வாள். கிருஷ்ணன் கதையைச் சொன்னாலும், "அவன் மணிப்பயல்" என்று சொல்வாள்.

"அதென்ன பாட்டி, மணிப்பயல், ரத்னம்போலப் பிறந்தவன் என்கிறாயே; ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"ரத்னம் ரொம்ப விலையுள்ளது. சுலபமாகக் கிடைக்காது. அதுமாதிரியே ராமனைப் போலவும் கிருஷ்ணனைப் போலவும் குழந்தைகள் பிறப்பது அருமை" என்று பாட்டி சொன்னாள்.

பாட்டி சொன்னது எனக்கு நன்ருக ஞாபகத்தில் இருக்கிறது. அதுவும், நம்முடைய பாரத தேசத்துக்கே ஒரு ரத்னம்போல ஒருவர் இருக்கிருர் என்று தெரிந்தபோது பாட்டி சொன்ன கதையை மறக்க முடியுமா?

ரத்னம்போல இருக்கிருர் என்றேனே, அவர் பெயரே ரத்னந்தான். நாம் ரத்னம் என்று சொல்கிறேம். அதே பேரை ஹிந்தியில் ஜவாஹர் என்று சொல்வார்கள்.

நான் யாரைப்பற்றிச் சொல்கிறேனென்று நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்களே! ஆம்; ஜவாஹர்லால் நேருவைத்தான், நம்முடைய தேசத்துக்கே ரத்னம் போன்றவர் என்று எல்லோரும் சொல்கிருர்கள்.

ஜவாஹர்லால் நேருவின் அப்பா மோதிலால் நேரு. மோதி என்ருல் முத்து. முத்து வயிற்றில் ரத்னம் பிறந்தது போல மோதிலால் நேருவுக்கு ஜவாஹர்லால் நேரு முதல் பிள்ளையாகப் பிறந்தார்.

அலகாபாத் என்ற நகரத்தில் மோதிலால் பெரிய வக்கீல். நல்ல பணக்காரர். வெள்ளைக்காரரைப் போல உடுப்புப் போடுவார். அவர்களைப்போல இருப்பதுதான் நாகரிகம் என்று அந்தக் காலத்தில் நினைத்தார்கள்.

ஜவாஹர்லால் நேரு 1889-ஆம் வருஷம் பிறந்தவர். முதல் பிள்ளை; செல்லப் பிள்ளை. அவருக்கு என்ன குறைவு? விளையாட்டுச் சாமானுக்குக் குறைவா? உடைக்குக் குறைவா? உணவுக்குக் குறைவா? ஒரு குறைவும் இல்லாமல் சந்தோஷமாக வளர்ந்துவந்தார்.

ஒரு நாள் குழந்தை ஜவாஹர் அப்பாவின் அறைக்குள் போனுர். அப்பா எங்கேயோ வெளியிலே போயிருந்தார். மேஜைமேல் இரண்டு பௌண்டன் பேணு இருப்பதைக் குழந்தை ஜவாஹர் பார்த்தார். அதில் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்துவிட்டார். அப்பா வெளியிலிருந்து வந்தார். மேஜையைப் பார்த்தார். ஒரு பேணுவைக் காணவில்லை. அந்தக் காலத்தில் பௌண்டன் பேணு சுலபமாகக் கிடைப்பதில்லை.

மோதிலால் நேரு மகா கோபக்காரர். "என் பேணு எங்கே?" என்று இரைச்சல் போட்டார். ஜவாஹர் ஒன்றும் பேசாமல் பேணுவை ஒளித்து வைத்துவிட்டார். கடைசியில் பேணுவை அப்பா கண்டுபிடித்தார். ஜவாஹர் மேல் கடுமையான கோபம் வந்தது. அவரை இழுத்து வந்து அடித்தார். செல்லப் பிள்ளையாக வளர்ந்தாலும்,

பாவம்! பேனவை ஒளித்ததற்காக அடிபட்டார். பிறகு அவருடைய அம்மா வந்து அவரை அழைத்துப் போய்ச் சமாதானம் செய்தார். இது அவர் ஐந்து வயசுக் குழந்தையாக இருந்தபோது நடந்தது.

குழந்தைக்கு வீட்டிலே வாத்தியாரை வைத்துப் பாடம் சொல்லித் தந்தார்கள். அந்த வாத்தியார் மிகவும் நல்லவர். நல்ல கதைகளையெல்லாம் சொல்வார். குதிரை வீரர்களின் கதைகளைச் சொல்வார். அந்தக் கதைகளைக் கேட்கும் போதெல்லாம், 'நாமும் ஒரு குதிரை வீரன் ஆகவேண்டும்' என்று ஜவாஹருக்கு ஆசை ஏற்படும்.

பெரிய குதிரையின் மேல் டக் டக் டக டக், டக் டக் டக டக் என்று சவாரி பண்ணுவதாக நினைத்துக்கொள்வார். அவர் நினைத்தது வீண்போகவில்லை. அப்பா நேரு பையன் ஜவாஹருக்கு ஒரு சின்னக் குதிரையையே வாங்கிக் கொடுத்தார். உண்மையான உயிருள்ள குதிரை. ஜவாஹருக்கு உண்டான ஆனந்தம் சொல்லி முடியாது. அதன் மேல் ஏறி ஓட்டக் கற்றுக் கொண்டார்.

ஊரெல்லாம் பிரமிக்கும்படி குதிரையை வெகு வேகமாக ஓட்ட வேண்டுமென்று ஜவாஹர்லாலுக்கு ஆசை. அடிக்கடி அதை ஓட்டிக் கொண்டு சவாரிசெய்து ஆனந்தப்படுவார். ஒரு நாள் அவருக்கு அதிக உற்சாகம் உண்டாகிவிட்டது. குதிரை மேல் ஏறிச் சவாரி செய்ய ஆரம்பித்தார். அதை விரட்டி ஓட்டினார். குதிரை நாலுகால் பாய்ச்சலில் ஓடியது. ஓடுகிற வேகத்தில் ஜவாஹர்லால் தொபுகடீர் என்று கீழே விழுந்தார். நல்ல வேளை; காயம் ஒன்றும் இல்லை. ஓட்டம் பிடித்த குதிரை வீட்டுக்குப் போய் நின்றது.

வீட்டில் உள்ளவர்கள் குதிரையைப் பார்த்தார்கள். ஜவாஹர்லாலை அதன்மேல் காணவில்லை. அம்மா வந்து பார்த்தாள்; அப்பா வந்து பார்த்தார். "நான் அவரைத் தள்ளிவிட்டு வந்தேன்" என்று குதிரை சொல்லுமா?

குழந்தையைத் தேடிக் கொண்டு போனார்கள். கண்டு பிடித்தார்கள். காயம் ஒன்றும் இல்லாமல் தலையைக் குனிந்து கொண்டு நின்றிருந்தார் ஜவாஹர். "கீழே விழுந்தும் காயம் படவில்லையே! நீ வீரன்தான்" என்று அப்பா கொண்டாடினார்.

அதுமுதல் குதிரைச் சவாரியை அவர் விட்டுவிட்டார் என்றுதானே நீங்கள் எண்ணுகிறீர்கள்? இல்லவே இல்லை. அந்தக் குதிரையிடம்

இன்னும் அதிகப் பிரியத்தோடு பழகினர். மேலும் மேலும் குதிரைச் சவாரி செய்தார். அறுபது வயசு நடக்கும் இப்போதுகூட நம்முடைய ஜவாஹர்லாலுக்குக் குதிரை ஏறிச் சவாரி பண்ணுவதென்ருல் பிரியம் அதிகம்.

ஜவாஹர்லால் மிகவும் குறும்புக்காரர். ஹோளி பண்டிகை என்று ஒரு பண்டிகையை வடதேசத்தில் கொண்டாடுவார்கள். அப்போது பீச்சாங்குழலில் வர்ணத் தண்ணீரை விட்டுச் சிநேகிதர்களின் மேல் பீச்சுவது வழக்கம். ஜவாஹர்லால் சிறுபையனுக இருந்தாலும் பெரியவர்களின்மேல் வர்ண ஜலத்தைப் பீச்சுவார். அவர்களைத் துரத்தித் துரத்தியடித்து முகத்திலும் ஆடைகளிலும் ஒரே வர்ணமாக ஆக்கிவிடுவார்.

அலகாபாத்தில் அவர்கள் ஒரு பெரிய மாளிகையில் வசித்தார்கள். அதற்கு ஆனந்த பவனம் என்று பெயர். அதில் நீச்சம் அடிக்கிறதற்காக ஒரு குளம் இருக்கிறது. ஜவாஹர்லால் நேரு அதில் நீச்சம் அடிப்பார். அவருடைய தகப்பனுருக்கு வேண்டியவர்கள்கூட அந்தக் குளத்துக்கு வந்து நீச்சமடித்துப் பொழுது போக்குவார்கள். ஜவாஹர் அவர்களிடம் குறும்பு பண்ணுவார். அசந்து மறந்து நின்ருல் தண்ணீருக்குள் தள்ளிவிடுவார். காலை இழுத்துவிடுத் தண்ணீருக்குள் மூழ்கி மறைந்துபோவார்.

அப்பா மோதிலால் நேருவுக்குப் பல கனவான்கள் சிநேகம். அவர்களை அடிக்கடி அழைத்து விருந்து நடத்துவார். அப்போதெல்லாம் வெள்ளைக்காரரைப் போல விருந்தில் மதுவை அருந்துவதுண்டு. ஒரு நாள் தகப்பனுரும் அவர் சிநேகிதர்களும் விருந்துண்டு கொண்டிருந்தார்கள். ஜவாஹர்லால் மறைவாக நின்று பார்த்துக்கொண்டிருந்தார். அவரை மோதிலால்நேரு பார்த்துவிட்டார். உடனே எடுத்துத் தம் மடியில் வைத்துக்கொண்டார். ஜவாஹருக்கு விஷமம் ஒன்றும் செய்ய முடியவில்லை. கண்ணைக் கொட்டாமல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தார். கிண்ணங்களில் மேல்நாட்டு மதுவை ஊற்றி அவர்கள் உண்டார்கள். அந்த மது செக்கச் செவேலென்று இருந்தது.

ஜவாஹர் மெதுவாக நழுவினர். அம்மாவிடம் ஓடிப் போய், "அம்மா, அம்மா! அப்பாவும் அவர் சிநேகிதர்களும் ரத்தத்தைக் குடிக்கிருர்கள்" என்று படபடப்புடன் சொன்னர். அவருக்கு அது மதுவென்று தெரியாது!

ஜவாஹருக்குப் பத்து வயசு நடந்தபோது அவருக்கு ஒரு தங்கை பிறந்தாள். குழந்தை பிறந்த செய்தியை ஜவாஹருக்கு டாக்டர் சொன்னார். "நல்ல வேளை! தங்கையாகப் பிறந்தாள். தம்பியாக இருந்தால் உன் சொத்தில் பங்கு கேட்பான்" என்று அவர் வேடிக்கையாகச் சொன்னார். ஜவாஹர்லாலுக்கு அது வேடிக்கையாகப் படவில்லை. "அதென்ன அப்படிச் சொல்கிறார்? என் பொருளைத் தம்பிக்குக் கொடுக்க மனம் இல்லாதவனா நான்?" என்று எண்ணி வருத்தப்பட்டார். டாக்டர் மேல் கோபம் கோபமாக வந்தது. உண்மையில் ஜவாஹரைப்போல ஏழைகளுக்கு இரங்கும் பெரியவர்கள் மிகவும் குறைவு. பெரிய அரண்மனையாக விளங்கிய ஆனந்த பவனத்தைப் பிற்காலத்தில் அப்பாவும் பிள்ளையும் சேர்ந்து காங்கிரஸுக்குக் கொடுத்துவிட்டார்கள். சுயராஜ்ய பவனம் என்று அதற்குப் புதிய பேர் உண்டாயிற்று.

தம் குமாரன் ஜவாஹர்லால் நேருவுக்கு ஒரு வெள்ளைக்காரரைக் கொண்டு பாடம் சொல்லிவைத்தார் தகப்பனார். புரூக்ஸ் என்பது அவர் பெயர். அவரிடம் ஜவாஹர் நன்றாகக் கல்வி கற்றார். பிறகு அவரை அவருடைய தகப்பனார் இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசித்தார் ஜவாஹர். காலேஜ் படிப்புப் படித்துப் பிறகு வக்கீல் படிப்பும் படித்தார்.

அந்தக் காலம் முதலே இந்தியாவுக்குச் சுதந்தரம் வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தது. இந்தியா சுதந்தரம் பெற வேலை செய்யவேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் வளர்ந்தது. படிப்பையெல்லாம் முடித்துக்கொண்டு இந்தியா வந்தார். மகாத்மா காந்தியினிடம் அன்பு பூண்டார். அவருடைய பிள்ளையைப்போலப் பழகினார். தேசத்துக்காகத் தொண்டு புரிந்து பல வருஷங்கள் சிறைக்குச் சென்றார்.

இந்தியா சுதந்தரம் அடைந்துவிட்டது. மகாத்மா காந்தி இப்போது இல்லை. ஆனாலும் ஜவாஹர்லால் நேரு இருக்கிறார் என்ற தைரியம் நமக்கு இருக்கிறது. குழந்தைகள் என்றால் அவருக்கு மிகவும் பிரியம். இந்தியாவின் பிரதம மந்திரியாக இருக்கும் அவருக்கு எவ்வளவோ வேலை. ஆனாலும் தம் இரண்டு பேரர்களுடன் விளையாடுவதில் அவருக்கு ஆனந்தம். அவர் சொல்கிறபடி நாமெல்லாம் செய்தால்தான் நமக்கும் அவரிடத்தில் பிரியம் இருப்பது உண்மையாகும்.

மாயாபுரி நீலவேணி

ரமணன்

ராஜா மகேந்திர பூபதியின் பெயரைக் கேட்டாலே மற்றத் தேசத்து ராஜாக்களுக்கு நடுக்கந்தான். மகேந்திர பூபதி அவ்வளவு பெரிய பராக்கிரமசாலி. அந்த அசகாய சூரனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். சிறுவயசிலிருந்தே வாள் வித்தை, வில்வித்தை எல்லாம் கற்றுக்கொண்டு வீராதி வீரர்களாய் இருந்தார்கள்.

ஒரு நாள் மகேந்திர பூபதி தன் மூன்று பிள்ளைகளையும் கூப்பிட்டு, "குழந்தைகளே! இனி அதிக நாள் நான் உயிரோடு இருக்கமாட்டேன். ஆகையால் இந்தப் பெரிய ராஜ்யத்தை நீங்களே இன்னும் பெரிதாக்கி ஆள வேண்டும். ஆனால் ஒன்று மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்: நம்முடைய ராஜ்யத்துக்குத் தெற்கே இளவரசி நீலவேணி இருக்கிறாளே, அவள் ரொம்பப் பொல்லாதவள். அவளுடைய மாயாபுரியின்மேல் படையெடுத்தவர்கள் திரும்பி வந்ததேயில்லை. போனால் போனதுதான்; ஜாக்கிரதை" என்று எச்சரிக்கை செய்தான்.

அதற்குப் பிறகு மகேந்திர பூபதி வெகுநாள் உயிரோடு இருக்கவில்லை. அவன் இறந்தவுடனே மூன்று சகோதரர்களும் முடி சூட்டிக்கொண்டார்கள். முதல் காரியமாக மாயாபுரியைத் தாக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு கட்டினார்கள்.

"மூன்று இளம் சிங்கங்களாக நாம் இருக்கும்போது நீலவேணியைப் பார்த்துவிடலாம் ஒரு கை!" என்றான் மூத்த ராஜகுமாரன்.

"சபாஷ்" என்றார்கள் மற்ற இருவரும். முதலில், மூத்த ராஜகுமாரன் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு மாயாபுரியின்மேல் படையெடுப்பது என்று தீர்மானமாயிற்று.

அப்படி அவனுக்கு ஏதாவது நேர்ந்து அவன் வருஷ முடிவுக்குள் திரும்பி வராவிட்டால், அடுத்தவன் அதேபோலப் படையெடுத்துப் போவது; அவனுக்கும் அதே கதியானால் கடைசி ராஜகுமாரனும் போவது என்று திட்டம் போட்டார்கள்.

அவர்களுடைய திட்டப்படி மூத்த ராஜகுமாரன் பெரும் சேனையுடன் புறப்பட்டான். சேனை வீரர்கள் 'ஹா-ஹா-ஓ' என்று கொம்மாளத்துடன்

மாயாபுரியின் எல்லைக்குள் நுழைந்தார்கள்.

'பெயரைப் பார், மாயாபுரி! இங்கே ஒரு மாயத்தையும் யாரும் புரியக் காணோமே!' என்று கேலி செய்துகொண்டே ஒவ்வொரு நாளும் அவர்கள் போய்க்கொண்டே யிருந்தார்கள்.

அந்த மாயாபுரி தேசமே ரொம்ப விசித்திரமாய்த்தான் இருந்தது. எங்கே பார்த்தாலும் ஒரே பொட்டல். வீடா, வாசலா கண்ணிலேயே படவில்லை. 'இதென்ன தேசமடா, பாழாய்ப்போன தேசம்' என்று அவர்களுக்குத் தோன்றியது. குடிக்கக்கூட ஒரு பொட்டுத் தண்ணீர் இல்லை. தாகம் நெஞ்சை வாட்டிற்று. இருந்தாலும் எப்படியும் முடிவு வரையில் போவது என்று போய்க்கொண்டே இருந்தார்கள்.

அப்படிப் போய்க்கொண்டே இருந்தபோது திடீரென்று ஒரு நாள் அவர்களுக்கு எதிரே ஜகஜ்ஜோதியாய் ஒரு பெரிய அரண்மனை தென்பட்டது. அந்த அரண்மனையின் உயரமும் பிரகாசமும் கண்களைக் கூசவைத்தன.

அதைக் கண்டதும் ராஜகுமாரன் 'ஹோ' என்று ஆனந்தத்தினால் கூச்சலிட்டான். தன் படைகளையெல்லாம் அணிவகுத்து அதைத் தாக்கி முற்றுகை யிடும்படி கட்டளையிட்டான். ஆனால் என்ன ஆச்சரியம்! அவர்களை எதிர்க்க யாராவது இருந்தால்தானே அங்கே! காக்கை, குருவிகூட இல்லை! எவ்வளவு பெரிய அறைகள்! எத்தனை பெரிய மண்டபங்கள்! என்ன அலங்காரம்! ஆகா, தேவலோகம் போலிருந்த அந்த அரண்மனையில் ஆளே இல்லை.

ரத்தினங்கள் வைத்திழைத்த கதவுகளும், விநோதமான புஷ்பங்களினால் அலங்கரித்த ஜன்னல்களும், பட்டப் பகலைப் போல ஒளி வீசும் அற்புதச் சித்திரசாலைகளும் பார்க்கப் பார்க்க அவர்களுக்குப் பிரமிப்பாய் இருந்தது. என்ன செய்வது, எங்கே போவது என்றே அவர்களுக்குப் புரியவில்லை. தலைகால் புரியாமல் தாறுமாறாய் உள்ளே நுழைந்தார்கள். அதில் விருந்து மண்டபத்தையும் விதம் விதமாய்த் தயாராக இருந்த அறுசுவை உண்டியையும் கண்ட சேனை வீரர்களுக்கு எதை முதலில் சாப்பிடுவது, எதைப் பிறகு அருந்துவது என்று ஒன்றுமே புரியவில்லை. பசியாலும் தாகத்தாலும் சோர்ந்து களைத்துப் போயிருந்த அந்த வீரர்கள் கண் மூக்குத் தெரியாமல் எல்லாவற்றையும் அள்ளி அள்ளிப் போட்டுக்கொண்டார்கள். தின்னத் தெரியாமல் வயிறு புடைக்கத் தின்றுவிட்டு வாயில் வந்ததையெல்லாம் அந்தக் குஷியில் பேசிக்கொண்டே ஒவ்வொருவராய் மெதுவாகத் தூங்கிப் போனார்கள். ராஜகுமாரனும் சேனாதிபதிகளும் அவர்களோடு சேர்ந்து குறட்டை விட்டார்கள்.

ராஜபோகமான சாப்பாடு;

அப்புறம் இந்திர போகமான தூக்கம்!

ராத்திரி வந்தது. ஒருவரும் எழுந்திருக்கவில்லை. அவர்களை வெட்டிப் போட்டால்கூடக் கேள்வியில்லை. இருந்தாற்போலிருந்து புஸ் என்று காற்றுச் சீறி அடித்தது. அழகான பெண் ஒருத்தி காற்றோடு காற்றாக, அந்த மாளிகையினுள் நுழைந்தாள். அவளைப் பார்த்தால் யாருமே பிரமித்துப் போக வேண்டியதுதான்; அப்படிப்பட்ட அழகு! கூந்தல்தான் எவ்வளவு நீளம்! வானத்தின் நீலம் போலப் பட்டாடையும் நக்ஷத்திரங்கள் ஜொலிப்பதைப் போல அதில் ஜரிகைப் பொட்டுகளும், அடடா! சுவர்ணக் கிளிதான்!

அந்தப் பிரம்மாண்டமான மாளிகையினுள் நுழைந்து அங்கே கால், கை தெரியாமல் தூங்கிக்கொண்டிருந்த சைனியங்களைப் பார்த்ததும் அந்தப் பெண் 'கிரீச்'சென்று பலமாகக் கத்தினாள். அந்தச் சத்தம் கேட்டதோ இல்லையோ, எல்லாரும் வாரியடித்துக்கொண்டு எழுந்தார்கள். அந்தப் பெண்ணரசியின் கண்கள் கோவைப்பழம் போல் சிவந்து இருந்ததையும் அவளுடைய அழகையும் கண்ட அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்த போதே, அவள் தன் கையிலுள்ள மந்திரக் கோல் ஒன்றை மெதுவாக ஆட்டினாள். அவ்வளவுதான்! எல்லா வீரர்களும் ராஜகுமாரனும் கற்சிலையைப் போல அசையமுடியாத

படி நின்றுவிட்டார்கள். வாயைக்கூட அவர்களால் திறக்க முடியவில்லை.

நீலவர்ணப் பட்டாடை காற்றில் பறக்க அந்த அழகி கத்தி ஒன்றை உருவிக்கொண்டு, பலருடைய தலைகளைச் சீவிச் சீவி எறிந்தாள். பலரைக் கத்தியினால் தூக்கி வீசி வெளியில் போட்டாள். ரத்தம் ஆறுபோல ஓடியது. பிறகு எல்லாரையும் தோட்டத்தில் குவித்துவிட்டு, உள்ளே வந்து கைகால்களை அலம்பிக் கொண்டு ஆகாரத்தைச் சாப்பிட்டாள். காலையில் சூரியன் உதித்ததும் வந்த வழியே விர்ரென்று பறந்து போய்விட்டாள்.

மாதங்கள் சென்றன. ஒரு வருஷம் ஆகிவிட்டது. அண்ணன் திரும்பி வருகிற வழியாய் இல்லையே என்று மற்ற இரண்டு ராஜகுமாரர்களும் கவலைப்பட்டார்கள். அங்கே அண்ணன் இருந்தால் தானே, திரும்பி வருவதற்கு?

அண்ணனைப் போலவே இரண்டாவது ராஜகுமாரனும் முன்னமே தீர்மானித்தபடி ஒரு பெரும்படையைத் திரட்டிக் கொண்டு நீலவேணியின் மாயாபுரியை நோக்கிக் கிளம்பினான்.

அதே மாளிகை தெரிந்தது. அதே மாதிரிதான் எல்லாம் நடந்தன. அவனும் அண்ணனைப் போலவே மாண்டுபோனான்.

அந்த வருஷம் முழுவதும் பார்த்துவிட்டுக் கடைசி ராஜ குமாரன் கிளம்பினான். அழகி லும் அறிவிலும் அவன் மற்ற இரண்டு ராஜகுமாரர்களைவிடச் சிறந்தவன். மாளிகையை நெருங்கியதும் அவனுடைய படைவீரர்கள் குடித்துக்கொம் மாளம் அடித்தபோதிலும் அவன் மட்டும் ஒன்றையுமே தொடவில்லை. வீரர்கள் உண்ட வெறியில் உறங்கியதும் அவன் மெதுவாக நழுவிப் பின்புறத் தோட்டத்திலுள்ள ஒரு மரத் தில் ஏறி ஒளிந்துகொண்டு, என்ன நடக்கிறது என்று ரொம்பக் கவனமாகப் பார்த் துக்கொண்டே இருந்தான்.

ராத்திரி ஆயிற்று. பெருஞ் சத்தத்துடன் காற்று அடித்தது. நீல உடை தரித்த மங்கை பறந்து வந்தாள். 'கிரீச்' என்று கத்தி எல்லாரையும் கிளம்பச் செய்தாள். மந்திரக் கோலைக் காட்டி மலைத்து நிற்க வைத்தாள். கத்தியை உருவிக்கொண்டு சிலையாய் நிற்கும் வீரர்களைக் கொன்று குவித்தாள். அதன் பிறகு கை கால்களை அலம்பிச் சுத்தம் செய்து கொண்டாள். தங்கத் தட்டை எடுத்து வைத்துக் கொண்டு விதவிதமான ஆகாரங் களைச் சாப்பிட்டாள். பொழுது விடிந்ததும் புறப்படலானாள்.

மரத்தில் ஒளிந்துகொண்டு இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ராஜகுமார னுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ஆத்திரம் வந்து என்ன செய்வது? அவன் எப்படிக் கீழே இறங்கி வந்து அவளைப் பழி வாங்க முடியும்? அவளு டைய அழகைக் கண்டு அவ னும் பிரமித்துப் போனான். இப்படி ஓர் அழகான பெண் இந்த உலகத்தில் இருக்க முடியுமா என்றுதான் அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. பிறகு மெதுவாக மனதைத் திடப்படுத்திக் கொண்டு கீழே இறங்கினான். நல்ல வேளையாக ஒரு குதிரை தோட்டத்தருகில் நின்றுகொண் டிருந்தது. அந்தப் பெண் பறக்க ஆரம்பித்ததும் அவளுக்குப் பின் புறமாய் குதிரைமேல் ஏறிக் கொண்டு அவள் போன திசை வழியே குதிரையைத் தட்டிவிட் டான். ஆனால் அவளோ கண் ணுக்கே தெரியாமல் கனவேக மாய்ப் போய்விட்டாள்.

ராஜகுமாரன் நம்பிக்கையைத் தளர விடவில்லை. ஆறு, மலை, வனம், வனாந்தரம் எல்லாவற் றையும் அநாயாசமாகக் கடந்து போய்க்கொண்டே இருந்தான். மலையுச்சியில் ஏறி அவள் சென்ற திசையைக் கவனித் தான். ஏதாவது கண்ணுக்குத் தெரிந்தால்தானே? ஒன்றுமே தெரியவில்லை! ஆயினும் அவன் விடவில்லை. குதிரையை இன் னும் வேகமாக முடுக்கினான்.

நடுவில் ஒரு புதர் இருந் ததை அவன் குதிரை கவனிக்க வில்லை. அது பசியால் தவித்துக் கொண் டிருந்ததால் அந்தப்

புதரைத்தாண்ட முடியாமல் கீழே விழுந்து உயிரை விட்டது. ராஜகுமாரனுக்கு ஒரே குறி! 'செத்தாலும் சரிதான்; நடந்தாவது போவது' என்று தீர்மானித்துக் கொண்டு நடந்தான்.

இரவு பகலாக நடந்து குயில்களின் நாட்டை அடைந்தான். அங்கே குயில்களெல்லாம் உல்லாசமாய்ப் பாடிப் பறந்துகொண்டிருந்தன. அவனுக்குப் பக்ஷி பாஷை தெரிந்திருந்ததால் அந்த வழியாக ஒரு ராஜகுமாரி பறந்து சென்றாள் என்பதை மட்டும் தெரிந்து கொண்டான். அப்புறம் மைனாவின் ராஜ்யம், வெண்கொக்குகளின் ராஜ்யம் எல்லாவற்றையும் கடந்து சென்றான். கடைசியாக அன்னப் பக்ஷிகளின் ராஜ்யத்தை அடைந்தபோது அன்ன ராஜா இவனைக் கண்டதும் எல்லாப் பறவைகளையும் கூவி அழைத்தது. எங்கிருந்தோ அவைகள் அவனுக்குப் பால் கொண்டு வந்து கொடுத்தன. பாலைக் குடித்துவிட்டு ராஜகுமாரன், "அந்தப் பறக்கும் நீலவேணியைக் கண்டுபிடிக்க, நீங்கள் யாராவது ஒத்தாசை செய்ய முடியாதா?" என்று கேட்டான்.

எல்லாப் பறவைகளும் பின்வாங்கின. "ஐயோ, நீலவேணியையா! எங்களுக்கு அவள் இருக்கும் இடமே தெரியாதே" என்று கூறிவிட்டன. அன்ன ராஜாவுக்கு வருத்தமாகப் போய்விட்டது. "இந்த ராஜகுமாரனுக்கு உதவி செய்ய இங்கே யாருமே இல்லையா?" என்றதும் ஒரு நொண்டி அன்னம், "இதோ, என்னால் முடியும்!" என்று முன்வந்தது.

இதைக் கண்டதும் எல்லாப் பறவைகளுமே சிரித்தன. ராஜகுமாரனே, "நீ வா; போதும்" என்றான் தைரியத்துடன்.

அன்னராஜா அவர்களை வழி அனுப்பியது. போகும் வழியில் ராஜகுமாரன் அந்த நொண்டிப் பக்ஷியை நோக்கி, "அந்த மாயாபுரி நீலவேணியை எப்படி

வெல்வது? அவள் ராஜ்யத்தை எப்படி அடைவது?" என்று ஆவலுடன் கேட்டான்.

"ராஜகுமாரா, நீ கவலைப் படாதே! அந்த நீலவேணி எல்லாப் பெண்களையும் போல ஒரு பெண்தான். அவள் கையிலுள்ள மந்திரக் கோல்தான் அவளுடைய மகிமைக்குக் காரணம். அதைத் தந்திரமாக எடுத்துவிட்டால் போதும்" என்று அது கூறியது.

ராஜகுமாரனுக்குச் சந்தோஷமும் பெரிய கவலையும் ஏற்பட்டன. 'தலையில் வெண்ணெயை வைத்துவிட்டால் கொக்கைப் பிடித்துவிடலாம்' என்று சொல்வது போல இருந்தது, அன்னம் கூறிய வார்த்தை.

"முதலில் அவளையே என்னால் பார்க்க முடியவில்லையே! அவளுடைய மந்திரக்கோலை எடுப்பதெங்கே?" என்று கேட்டான்.

அன்னம் திடீரென்று அவன் மேல் மண்ணை வாரித் தூற்றியது அப்படித் தூற்றியவுடனே அவன் ஒரு வெட்டுக்கிளியாக மாறிவிட்டான். "பயப்படாதே. என் முதுகில் இப்பொழுது ஏறிக்கொள். அந்த நீலவேணியின் இருப்பிடத்தில் உன்னைக் கொண்டு போய் விட்டுவிடுகிறேன்" என்று தைரியம் சொன்னது நொண்டி அன்னம்.

அவன் அந்த வெட்டுக்கிளி உருவத்துடனே அன்னத்தின் முதுகில் உட்கார்ந்துகொண்டான். புஷ்பக விமானத்தில் பறப்பது போல அன்னம் அவனைச் சுமந்து 'ஜிவ்'வென்று பறந்தது.

"ராஜகுமாரா, நீ மனித உருவத்துடன் செல்வதானால், அவளுடைய இடத்துக்குப் போகப் பல வருஷங்கள் ஆகும். நாம் போய்ச் சேரும்போது அந்த ராஜகுமாரி அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பாள். அவள் சயனித்துக்கொண்டிருக்கும் மஞ்சத்தின் அடியிலேதான் எப்போதும் அவள் அந்த மந்திரக் கோலை வைப்பது வழக்கம். அதை எடுத்து ஒளித்து வைத்துவிடு. அதன் பிறகு உனக்கு வெற்றிதான்" என்றது அன்னம்.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டான் ராஜகுமாரன்.

"அப்படிக் கேள். முதலில் நான் அவளிடந்தான் செல்வமாக வளர்ந்தேன். ஒரு நாள் கோபத்தில் என் காலை நொண்டியாக்கி என்னை விரட்டிவிட்டாள் அந்த நீலவேணி. எனக்கு ஒவ்வொன்றும் நன்றாய்த் தெரியும். நீ பின்புறத் தோட்டத்தின் வழியாகப் போய் நவரத்தின மண்டபத்தில் நுழைந்து சென்றால் அவள் இருக்கும் இடத்தைப் பார்க்கலாம்" என்று எல்லா விவரங்களையும் சொல்லிக் கொடுத்தது அன்னம். ராஜகுமாரன் மிகுந்த சந்தோஷமடைந்தான். "நீ செய்யும் இந்த உதவிக்கு நான் உனக்கு என்ன செய்யப் போகிறேன்?" என்றுகூறினான்.

"எப்படியாவது உனக்கு ஜயம் உண்டாகட்டும்" என்றது

அன்னம். இதற்குள் மாயாபுரி நீலவேணியின் மாளிகைத் தோட்டத்துக்கு அவர்கள் வந்துசேர்ந்தார்கள். வெட்டுக்கிளி ரூபத்தில் இருந்த ராஜகுமாரன்மேல் அன்னம் மறுபடியும் மண்ணை வாரி இறைத்தது. உடனே அவனுடைய சுய ரூபம் வந்துவிட்டது.

கையில் வாள் ஒன்றை உருவிக்கொண்டு அன்னம் கூறிய வழியாகவே அவன் நவரத்தின மண்டபத்துக்குள் நுழைந்தான். அந்த மாளிகையின் அழகும் அங்கேயுள்ள அதிசயங்களும் அலங்காரமும் அவன் மனதை மயக்கிவிடும் போலிருந்தன. ராஜகுமாரன் ஒன்றையுமே கவனிக்காமல் நேராக அவளுடைய மஞ்சத்தை அடைந்தான். மனசு 'திக் திக்'கென்று அடித்துக்கொண்டது. மயிரிழை தப்பினாலும் உயிருக்கே ஆபத்து. மெதுவாக அவள் தூங்குகின்ற கட்டிலை நெருங்கினான். எல்லாம் அன்னம் கூறியபடியே இருந்தது. அவளை நன்றாகப் பார்த்துவிட்டால் அந்த அழகைக் கண்டு உலகமே மறந்துவிடும் என்று அவனுக்குத் தோன்றியது. கண்ணை மூடிக்கொண்டு, மஞ்சத்தின் அடியில் கையை விட்டுத் துழாவி அந்த மந்திரக் கோலை எடுத்துவிட்டான். பிறகுதான் அவனுக்கு உயிரே வந்தது. இதை எடுப்பதற்குள் அவன் பட்ட பாடு!

மந்திரக் கோலை மடியில் வைத்து மறைத்துக்கொண்டு,

அந்த அழகியைக் கண்ணெடுத்துப் பார்த்தான். ஆகா! கிட்டேயிருந்து பார்க்கும் போது அவள் வனப்பு, பல மடங்கு அதிகமாய் இருந்தது. அந்த நீலவேணி தன் அழகிய கண்களை மூடிக் கொண்டு துயிலில் ஆழ்ந்து கிடந்தாள்.

ராஜகுமாரனுக்கோ அவளை எழுப்பும் விதம் தெரியவில்லை. அவசர அவசரமாய் அவளுடைய புஷ்பம்போன்ற கையை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டான். நீலவேணி இந்த ஸ்பரிசத்தினல் திடீரென்று கண் விழித்துப் பார்த்ததும் அழகே உருவெடுத்த ஆண்சிங்கம் போல ராஜகுமாரன் நிற்பதைக் கண்டாள். அவளுக்குப் பயமும் கோபமும் உண்டாயின. கோபத்தில்தான் அவள் எவ்வளவு ஒய்யாரமாய் இருந்தாள்!

நீலவேணி மந்திரக் கோலை எடுக்கக் கையை நீட்டிய போது ராஜகுமாரன் அவளைப் பார்த்துக் கலகலவென்று பெரிதாகச் சிரித்தான். மந்திரக்கோல் தான் அவனிடம் இருக்கிறதே!

“நீலவேணி! உன்னுடைய மந்திரக்கோல் இதோ இருக்கிறது. இதை நீ இனி அடைய முடியாது” என்ருன் ராஜகுமாரன் அழுத்தலாக.

ராஜகுமாரனின் தைரியத்தையும் அவனுடைய கம்பீரமான அழகையும் கண்ட ராஜகுமாரி ஒன்றும் தோன்ருமல் அவன் மீது சாய்ந்துவிட்டாள்.

நீலவேணி உண்மையில் பொல்லாதவளல்ல என்பது அவளுடைய பார்வையிலிருந்தே அவனுக்குத் தெரிந்தது. அவளுடைய தனிமையே அதற்குக் காரணம் என்பதை அவன் தெரிந்துகொண்டான். உயிர்களைக் கொல்வது இது வரையிலும் ஒரு விளையாட்டு என்று அவள் எண்ணியிருந்தாள். அவள் உடனே ராஜகுமாரனைப் பார்த்து, “எனக்கு அந்த மந்திரக்கோல் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனல் நீங்கள் இல்லாமல் என்னல் உயிரோடு இருக்க முடியாது” என்று கண்ணில் நீர் கசியக் கூறினள்.

ராஜகுமாரனும் நீலவேணியும் உலகத்திலேயே நடந்திராத விமரிசையுடன் சில நாளில் கல்யாணம் செய்து கொண்டார்கள்.

நீலவேணியையும் அன்னத்தையும் அழைத்துக்கொண்டு தன் ராஜ்யத்துக்குத் திரும்பி வந்தான் ராஜகுமாரன். வரும் வழியில் அவனுடைய சகோதரர்கள் இறந்து கிடந்த மாளிகை வந்தது. மந்திரக்கோலை ஆட்டியதும் இரண்டு ராஜகுமாரர்களும் மற்ற வீரர்களும் பிழைத்து எழுந்துவிட்டார்கள். அது மட்டுமா? மந்திரக் கோலின் சக்தியால், பொட்டலாகக் கிடந்த அந்த மாயாபுரி நீர்வளமும் நிலவளமும் செழித்த நாடாக மாறியது.

எல்லாரும் குதூகலத்துடனே ராஜகுமாரனையும் நீலவேணியையும் வரவேற்று ஆனந்தம் பொங்கக் கூத்தாடினர்கள்.

வெட்டி ஒட்டுங்கள்

இந்தச் சிறுவன் 'ஹஸாரே' பெரிய கிரிக்கட் ஆட்டக்காரன்! இ உடுப்புக பக்கத்திலுள்ளன. அதேபோல இவன் தங்கைக்கும் ஆடை ஆபரணங்கள்

ஆட்டுப் புலி

சோமசன்மா

ஒரே ஓர் ஊரில் கறுப்பக் கோனான் என்று ஒரு கோனான் இருந்தான். கோனான் என்றால்தான் உங்களுக்குத் தெரியுமே! பட்டையாக நெற்றியில் நாமம் போட்டுக்கொண்டு, கையில் கயிற்றுடன் மாடு கறக்க வருவானே, அவன்தான். அதாவது, முன் காலத்தில் வருவான் - இப்போதெல்லாந்தான் பசுமாட்டையே பார்க்க முடிகிறதில்லையே! பால் என்று எதையோ வெள்ளைத் தண்ணீரைத்தானே பார்க்கிறோம்?

அந்தக் கோனானிடம் ஒரு மந்தை ஆடுகள் இருந்தன; செம்மறியாடுகள். ஒரு நாள் அவைகளை மேய்த்துவரக் காட்டுக்குப் போனான். போய்விட்டுத் திரும்பி வரும்போது இருட்டிப் போய்விட்டது. ஆடுகளை ஓட்டிக்கொண்டு பாதி தூரம் வந்திருப்பான். அப்போது ஒரு ஆடு "மே!" என்று கத்திற்று.

கறுப்பக் கோனான் ஓடினான். கத்தின ஆடு தனியாக நின்றுகொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அந்த ஆடு குட்டி போட்டிருந்தது. அந்தக் குட்டியைத் தூக்கிக்கொண்டு வரவேண்டுமே என்றுதான் அந்த அம்மா ஆடு கத்தியிருக்கிறது. சின்னக்குட்டியினால் நடக்க முடியாது அல்லவா? அதனால்தான்.

கீழே குனிந்த கறுப்பக் கோனான் ஆச்சரியப்பட்டான். என்ன அதிசயம்! கீழே ஒரு குட்டிக்குப் பதிலாக இரண்டு குட்டிகள் கிடந்தன. அப்படியே இரண்டு கையாலும் அந்த இரண்டு குட்டிகளையும் வாரித் தூக்கிக்கொண்டு குதித்துக் கொண்டே வீடு வந்துசேர்ந்தான். அவனுக்கு ஒரே சந்தோஷம்!

ஆனால் கறுப்பக் கோனானுக்கு உண்மை தெரியாது. அந்த இரண்டு குட்டிகளில் ஒன்றுதான் ஆட்டுக்குட்டி; இன்னொன்று ஆட்டுக்குட்டியல்ல, புலிக்குட்டி! அது அங்கே எப்படி வந்தது

என்றால் வழி தெரியாமல் வந்துவிட்டது. அது புலிக்குட்டி என்று தெரியாமலே அதை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய், கறுப்பக் கோனான் வளர்த்து வந்தான்.

புலிக்குட்டி என்றால் மேலே கோடுகள் இருக்கவேண்டும் அல்லவா? அதைப்போலவே இந்தப் புலிக்குட்டிக்கும் மேலே கோடுகள் இருந்தன. அதைப் பார்த்து மற்ற ஆட்டுக்குட்டிகள் சிரித்தன. ஆனால் புலிக்குட்டிக்கும் தான் ஒரு புலிக்குட்டி என்பது தெரியாது. தானும் ஓர் ஆட்டுக்குட்டிதான் என்று நினைத்திருந்தது. அதனால் மற்ற ஆடுகள் அதைப் பார்த்துப் பரிகாசம் செய்யும்போது அதற்கு அழுகை அழுகையாய் வரும். ஒரு மூலையில் போய் உட்கார்ந்துகொண்டு, "சுவாமி, பிள்ளையாரே, எனக்கு மாத்திரம் ஏன் இப்படி வரி வரியாய்க் கோடுகளை மேலே போட்டிருக்கிறாய்? என்னைப் பார்த்து எல்லாரும் சிரிக்கிறார்களே!" என்று அழும்.

இப்படி இருக்கையில், ஒரு நாள் ஆடுகள் மேய்ந்து கொண்டே காட்டுக்குள் வெகுதூரம் போய்விட்டன. அன்றைக்குக் கறுப்பக் கோனானும் வரவில்லை. நன்றாக இருட்டிவிட்டது. அப்போது தூரத்திலிருந்து, 'குர்ர்' என்று ஒரு சத்தம் கேட்டது. ஆடுகள் பயந்துகொண்டு விழித்தன.

"ஏதோ சத்தம் கேட்கிறது. அதைக் கேட்டால் புலியின் சத்தத்தைப்போல் இருக்கிறது. நாம் வீட்டுக்குப் போய்விடுவோம்" என்று ஓர் ஆடு சொல்லிற்று. மற்ற ஆடுகளும், "ஆம், அதுதான் சரி!" என்று கிளம்பிவிட்டன. எல்லாம் ஆடுகள் தானே!

ஆனால் நம்முடைய புலிக்குட்டி மட்டும் அந்த இடத்தை விட்டு அசையவில்லை. அதற்குப் பயமாகவே இல்லை. என்னதான் ஆடுகளோடு வளர்ந்தாலும் அது ஜாதியில் புலியல்லவா? ஆகையினால் அது கொஞ்சம்கூடப் பயமில்லாமல் அப்படியே நின்றது.

அதற்குமேல் புலிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

அப்போது நிஜமாகவே, 'குர்ர்ர்!' என்று உறுமிக்கொண்டு ஒரு புலி அங்கே வந்தது. எல்லா ஆடுகளும் பயந்துகொண்டு ஓடும்போது ஒரு குட்டி மட்டும் பயப்படாமல் நிற்பதைப் பார்த்ததும் அதற்கு ரொம்ப ஆச்சரியமாய் இருந்தது.

"டேய்! நீ ஏன் ஓடவில்லை?" என்று அதட்டிக் கேட்டது புலி.

"ஏன், எதற்காக ஓடவேண்டும்!" என்றது குட்டி.

புலி: நான் யார் தெரியுமா?

குட்டி: நீ யாராயிருந்தால் எனக்கென்ன?

புலி: நான் புலி. என்னைக் கண்டு அத்தனை ஆடுகளும் பயந்து கொண்டு ஓடும்போது நீ மட்டும் ஏன் ஓடாமல் நிற்கிறாய்?

குட்டி: அது என் இஷ்டம்.

"டேய்! நீ சின்னப் பயல். ஆடுகள் என்றால் புலியைக் கண்டு பயப்படவேண்டும். தெரியுமா?" என்றது புலி.

"அப்படி என்ன சட்டமோ? நான் ஆட்டுக்குட்டி தான். உன்னைக் கண்டு எனக்குத் துளிக்கூடப் பயம் இல்லை" என்றது புலிக்குட்டி.

அதைக் கேட்டு ஆச்சரியமடைந்த புலி கிட்டே வந்து அந்தக் குட்டியை நன்றாகப் பார்த்தது. அதற்கு உண்மை தெரிந்து விட்டது. "டேய்! நீ ஆட்டுக்குட்டி யல்ல, புலிக்குட்டி!" என்றது.

புலிக்குட்டி, "இல்லை; நான், ஆட்டுக்குட்டிதான்!" என்றது.

"இல்லை, புலிக்குட்டி!"

"போய்! வேண்டுமானால் வீட்டுக்கு வந்து என் அம்மாவைக் கேள்!"

"அட, அசடே!" என்று பக்கத்தில் வந்தது புலி: "இதோ பார். என்மேல் வரி வரியாகக் கோடு. அதைப்போலவே உனக்கும் இருக்கிறது. என் கண்ணைப் பார். உன் கண்ணையும் பார்த்

துக் கொள். நீ புலிக்குட்டிதான். தெரிந்ததா?" என்று சொல் லிற்று.

புலிக்குட்டிக்கு அப்போதுதான் அது சொல்வது நியாயம் என்று தோன்றிற்று. உடனே, "நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டது.

"நீ ஆடுகளைத் தின்ன வேண்டும்" என்றது புலி.

"ஆடுகளையா? அது எனக்குப் பிடிக்காதே. புல்தானே பிடிக்கும்?"

"முதலில் பிடிக்காது. பிறகு ருசி பார்த்தால் விடமாட் டாய். ரொம்ப நன்ருய் இருக்கும்."

"எப்படித் தின்பது? ஆடுகள் கத்துமே! என்னை அடிக்குமே!"

"காலைத் தூக்கி ஓங்கி ஓர் அறை கொடுத்தால் அவை கள் செத்துப்போகும். உடனே தின்றுவிடலாம்."

"கறுப்பக் கோனுன் விட்டுவிடுவானு?"

"அவனையும் அதே மாதிரி அறைந்தால் அவனும் செத்துப் போவான். அவனையும் தின்றுவிடலாம்."

"சரி" என்று சொல்லிவிட்டுப் புலிக்குட்டி வீட்டுக்குத் திரும்பி வந்தது. வரும் வழியில், "நானே புலி! நானே புலி!" என்று குஷியாகப் பாடிக்கொண்டே நடன நடை போட்டுக் கொண்டு வந்தது.

வீட்டுக்கு வந்ததும் தன் சிநேகிதர்களிடம் போய், "டேய்! நான் யார் தெரியுமா? நான்தான் புலி!" என்று மாரைத் தட்டியது. அதைக் கேட்ட மற்ற ஆட்டுக்குட்டிகள் மடமட வென்று சிரித்தன.

அதைப் பார்த்ததும் புலிக்குட்டிக்குக் கோபம் கோபமாக வந்தது. "டேய்! ஆட்டுப் பயல்களே! உங்களை ஒரே அறை யில் கொன்று விழுங்கிவிடுகிறேன் பார்!" என்று முன்னங் கால்களைத் தூக்கிக்கொண்டு பாய்ந்தது. அந்தச் சமயம் பார்த்து ஓர் ஆட்டுக்குட்டி பின்னங்காலைத் தட்டிவிட்டது. பாவம், புலிக்குட்டி பொத்தென்று கீழே விழுந்தது. எல்லா ஆட்டுக் குட்டிகளும் சேர்ந்து அதன்மேல் விழுந்து, "சூரப் புலியைப் பாருடா!" என்று அதை மொத்து மொத்தென்று மொத்தி விட்டன. அதன் பிறகு அது எழுந்திருக்கவே இல்லை.

ஆகையால், பிள்ளைகளே! என்னதான் ஜாதியில் புலி யானுலும் அது ஆடுகளுடன் வளர்ந்தால், பயமில்லாமல் பேசத் தான் முடியுமேயன்றி, புலியைப்போல் பாய முடியாது என்பது இதனுல் விளங்குகிறது அல்லவா?

பனி நிலச் சிறுவர்

ச. கு. கணபதி ஐயர்

ஒரு ராஜகுமாரன், ஒரு மந்திரிகுமாரன் இருவரும் விட்டுப் பிரியாத நண்பர்கள். அவர்களிடம் ஒரு கீல் குதிரை இருந்தது. அதன்மேல் ஏறிக்கொண்டு அதன் தலையிலுள்ள கீலை முடுக்கிவிட்டால், அவர்கள் நினைக்கிற இடத்துக்கு அந்தக் குதிரை அதிவேகமாகச் செல்லுமாம். ராஜகுமாரனும் மந்திரி குமாரனும் தங்கள் கீல் குதிரையின் உதவியினால் உலகத்தையே சுற்றிப் பார்த்து வந்தார்களாம்.

இது ஒரு கதை. உங்களிடம் ஒரு கீல் குதிரை இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். நீங்களும் உலகத்தைச் சுற்றிப் பார்க்கலாம். அங்கங்கே உள்ள சிறுவர்களும் சிறுமிகளும் எப்படி எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளலாம்.

கீழே உள்ள படத்தைப் பாருங்கள்! எந்த எந்தக் கண்டங்களின் பாகங்கள் இந்தப் படத்தில் இருக்கின்றன?



பனிப் பிரதேசம்

சீல்

இந்தப் பிரதேசத்தில் பனிக்காலம் சுமார் ஆறு மாதத்துக்கும் அதிகமாக இருக்கும். பனி குறைவான காலத்தை இங்கே உள்ளவர்கள் கோடைக்காலம் என்கிருர்கள். கோடைக்காலத்தில்கூட, பனிக் கட்டிகள் அப்படியே இருக்கும். அதனுல் இதைப் பனிப் பிரதேசம் என்பார்கள்.

இந்தப் பனிப் பிரதேசத்தில் வாழ்பவர் எஸ்கிமோ ஜாதியார். அவர்கள் மஞ்சள் நிறம் உள்ளவர்கள்; குள்ளமானவர்கள்.

இந்தப் பிரதேசத்தில் பயிர் பச்சைகள் விளைவதில்லை. சீல் என்ற நீர்ப் பிராணியும் திமிங்கிலமுமே எஸ்கிமோக்களுக்கு ஆகாரம். இவைகளை வேட்டையாடுவதுதான் அவர்களுக்கு முக்கியமான தொழில். சீலின் தோல்தான் உடை. அதன் கொழுப்பைத் தின்பதோடு விளக்கு எரிக்கவும் அடுப்பு எரிக்கவும் உபயோகிக்கிருர்கள்.

குளிர் ரொம்ப அதிகம். அதனுல் இவர்கள் உடல் முழுவதையும் தோல் உடையினுல் மூடிக்கொண் டிருப்பார்கள். ஆண்களின் உடைக்கும் பெண்களின் உடைக்கும் அதிக பேதம் இல்லை. சீலின் தோலால் செய்த ஒரு நிஜார், உள்சட்டை, மேல் சட்டை, தலைக் குல்லாய் இவ்வளவுதான்.

குளிர்காலத்தில் இவர்கள் பனிக்கட்டிப் பலகைகளைக் கொண்டு சிறிய வீட்டைக் கட்டிக்கொள்ளுவார்கள். வீடு ஒரு கூடையைக் கவிழ்த்து வைத்ததைப்போல் இருக்கும். அதன் வாசல் மூன்றடி உயரமே இருக்கும். வாசலில் நுழைந்து செல்வதற்கு ஒரு குகையை அமைத்திருப்பார்கள். பனிக்கட்டி வீட்டுக்குள் போகவேண்டுமானுல் கையையும் காலையும் தரையில் ஊன்றிக்கொண்டு மிருகங்கள் மாதிரி ஊர்ந்துதான் செல்ல வேண்டும்.

உள்ளே கூரை ஆறடி உயரங்கூட இல்லை. நாம் சென்ருல் நம் தலை இடிக்கும். ஜன்னல்களே இல்லாததால் எப்பொழுதும் விளக்கு எரிந்துகொண் டிருக்கும். வீட்டின் ஓரங்களில் சிறிய விசிப்பலகை அல்லது பெஞ்சுகள் இருக்கும். எஸ்கிமோ குடும்பத்தார் இவைகளின் மேல்தான் படுத்துத் தூங்குவார்கள்.

எஸ்கிமோ நாய்

அறை சிறியது. வீடு முழுவதும் இந்த ஒரே அறைதான். இதில் நெருக்கமாக எஸ்கிமோக்கள் வசித்து வருகிறார்கள். சில இடங்களில் இரண்டு மூன்று குடும்பங்கள் கூட ஒரே வீட்டில் இருக்குமாம்.

கோடைக்காலத்தில் இவர்கள் பனிவீடுகளில் வசிப்பதில்லை. வெளியே தோலினால் கூடாரங்களை அமைத்துக்கொண்டு அவைகளில் வாசம் செய்கிறார்கள். இதுதான் அவர்களுக்குக் குஷியான காலம்.

எஸ்கிமோ சிறுவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அந்த நாடுகளில் பள்ளிக்கூடமே இல்லை. விரல்விட்டுச் சில எண்களை எண்ணத் தெரிந்துகொள்வார்கள். ஆண் குழந்தைகள் வேட்டையாடவும் வீடுகளையும் கூடாரங்களையும் அமைக்கவும் கற்றுக்கொள்வார்கள். பெண் குழந்தைகள் தோல் ஆடைகளைத் தைக்கவும் சில உணவைப் பக்குவம் செய்யவும் பழகிக்கொள்வார்கள். இவர்கள் படிப்பு இவ்வளவுதான். இந்தப் படிப்பைக் கற்றுக்கொடுப்பவர்கள் பெற்றோர்களே.

எஸ்கிமோக்களின் வண்டிகள் விசித்திரமானவை. அவைகளுக்குச் சக்கரங்கள் இல்லை; மேல் கூடும் இல்லை. அவைகளை நாய்களே இழுத்துச் செல்லும். பனிப்பிரதேசமாக இருப்பதனால் சக்கரம் இல்லாமலே வண்டி செல்லும். இந்த வண்டிக்கு ஸ்லெட்ஜ் என்று பெயர்.

கோடைக்காலத்தில் எஸ்கிமோ சிறுவர்கள் பல விளையாட்டுக்கள் விளையாடுவார்கள். அவைகளில் கயிற்றைத் தாண்டுதல், ஓட்டம், கண்ணாமூச்சி இவைகளே முக்கியம். சில சமயம் பல சிறிய குழந்தைகளை ஸ்லெட்ஜ் வண்டியில் ஏற்றி, பெரிய குழந்தைகள் நாய்களைப்போல் வண்டியை இழுத்து விளையாடுவதும் உண்டு.

பனிக்கட்டிகள் நீரில் மிதந்துகொண் டிருக்கும். சிறிய பனிக்கட்டிகளைப் படகாகக் கொண்டு எஸ்கிமோக்கள் சில வேட்டைக்குப் போவார்கள். அவர்களுடன் பெரிய பையன்களும் செல்வதுண்டு. கோலைக் கொண்டு பனிக்கட்டிப் படகைத் தள்ளவும் எஸ்கிமோ சிறுவர் தெரிந்துகொள்ளுவார்கள்.



பனிக் கட்டி வீடு

இவர்கள் பாஷையில் வாக்கியங்களே இல்லை. இரண்டொரு வார்த்தைகள் மாத்திரம் உண்டு. பையன்களைத் தாய் தந்தையர் வைய மாட்டார்கள். சிறுவரானாலும் சரி, பெரியவரானாலும் சரி, ஒருவருக்கு ஒருவர் திட்டிக்கொள்வதில்லை. இவர்கள் பாஷையில் திட்டுவதற்கு வார்த்தையே கிடையாதாம். எஸ்கிமோக்களுக்கு வெள்ளைக்காரரைக் கண்டால் பிடிப்பதில்லை.

எஸ்கிமோ சிறுவனுக்கு யாரும் பாட்டுச் சொல்லித் தருவதில்லை. அவனாகவே கற்றுக்கொள்வான். பெரியவர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டால், அவர்கள் சண்டை பிடிக்காமல் பலரை வைத்துக்கொண்டு நியாயம் பேசுவார்கள். விசாரணை செய்கிறவர் இரண்டு கட்சிக்காரரையும் பாட்டாகத் தங்கள் வழக்கைக் கூறும்படி சொல்லுவார். இருவரும் தங்கள் முறையைப் பாட்டாகப் பாடுவார்கள். இதனைக் கேட்க எஸ்கிமோக் குடும்பங்கள் அங்கே வந்து கூடிவிடும். பாட்டுக்கு ஏற்றபடி பக்க வாத்தியங்களும் வாசிப்பார்கள். எவருடைய பாட்டு நன்றாக இருக்கிறதோ அவரே வழக்கில் ஜயித்ததாக அர்த்தம். தோற்றுப் போனவருக்கு அற்ப தண்டனை உண்டு. இந்த விதமான வழக்குகளைக் கவனித்தால் சிறுவர்களும் சிறுமிகளும் தாங்களாகவே பாடத் தெரிந்துகொள்வார்கள்.



ஸ்லெட்ஜ் வண்டி

நான் பெரியவனானால்-

"எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை இவைகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நீங்கள் பெரியவனானால் எப்படி இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களோ அதை அப்படியே எழுதுங்கள்" என்று ஒரு பள்ளிக்கூடத்துக்குச் சென்று கேட்டோம். இதோ எட்டுக் குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். உங்கள் பள்ளிக்கூடத்துக்கும் ஒரு நாள் நாங்கள் வருவோம்.

ஏ. ஆர். ராமநாதன், வயது 9.

ரங்கராஜன், வயது 10.

நான் சயன்ஸ்விஞ்ஞானத்தை நன்றாக கற்று கொள்ளப் போகிறேன். இன்னும் உலகத்தில் கண்டு பிடிக்காத பல விஷயங்களைக்கண்டுபிடித்து விஞ்ஞானத்தை மேலே கொண்டு வருவேன். விஞ்ஞானத்தால் டாக்டர் வேலைக்கும் பயன் உண்டு. நேரு கூட விஞ்ஞானத்தில் பற்றுக் கொண்டு படித்தார். இக்காலத்தில் விஞ்ஞானத்தால் பல புதிய கருவிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆதலால் நான் பெரியவனான பிறகு சயன்ஸ் விஞ்ஞானி ஆவேன்.

எனக்கு போலீஸ் இன்ஸ்பெக்டராக ஆசை. ஏனன்றால் குற்றவாளியை கண்டிக்கலாம். வக்கிலானால் மற்ற கேஸ் கவனிக்கலாம். குற்றவாளியை சிறையில் அடைக்கலாம். அங்கு தூக்கு தண்டனை கொடுப்பேன். எவரையும் அதட்டி கண்டிப்பேன். நன்றாக உதைப்பேன். பொய் சொல்கிறவர்களை கத்தியில் குத்துவேன்.

ஆர். ராஜு, வயது 10.

பி. பரிமளா, வயது 10.

எனக்கு விவசாய வேலைக்கு போக வேண்டும். அது ஏன் என்றால் அங்கு மலை இடங்களும் பல வாய்க்காலும் இருக்கும். இங்கு பல மாடுகள் நின்றுகொண் டிருக்கும். அது ஓடும்போது மணி ஓசையை கேட்டால் அந்த ஓசை மிகவும் பிரியம். அங்குள்ள கிராமங்கள் மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கும். உழவும் மிசினைப் பார்த்தால் அதுவும் உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கும். பிறகு பழங்களை நன்றாக புசிப்பேன். பிறகு வேலைகாரர்களை நன்றாக அடக்கி பழக்குவேன். இப்பொழுது அதை நினைத்தால், நான் இப்பொழுது அந்த வேலைக்கு போய்விடலாமா என்று ஆவலாய் இருக்கிறது. என்னை எல்லோரும் புகழும்படி ஒரு கொடியை நாட்டி வைப்பேன்.

நான் பெரியவளானால் நான் டாக்டர் யாகிவிடுவேன். நான் ஏழைகளுக்கு உதவி செய்வேன். நான் இப்பொழுது நன்றாய் படித்தால் டாக்டர் ஆகி விடலாம். நான் ஏழைகளிடம் பணம் வாங்குவதில்லை. நான் அழகான உடைகளை உடுப்பேன். நன்றாய் பணம் சம்பாதிப்பேன். நான் எப்பொழுதும் சினிமாவுக்கு போவது என்னுடைய ஆசை. நான் அப்பா அம்மாவுக்கு உதவி செய்வேன். நான் ஆப்பரேசன் செய்வதற்கு மிகவும் ஆசை. நான் சிறுவயதிலிருக்கும் பொழுது டீச்சர் கண்டித்தால் எனக்கு அவர்களை அடித்துவிடும்போல் எனக்கு இருக்கும். ஆனால் அடிக்க முடிவதில்லை. எனக்கு இந்த ஆசை எப்படி வந்தது? எங்கள் அப்பாவும் அம்மாவும் டாக்டர். அதனால் எனக்கும் ஆசை இருந்தது.

என்.விமலா, வயது 11.

பாலசுப்ரமணியன், வயது 10.

எனக்கு இப்பொழுது 11 வயது. நான் இன்னும் சில ஆண்டுகள் ஆனபிறகு பெரியவளாவேன். நான் பெரியவளானபின் உபாத்தியாயனியாக ஆக வேண்டுமென்று ஆவலாய் இருக்கிறது. நான் இன்னும் நிறைய படிப்பு படித்துவிட்டு உபாத்தியாயினி வேலைக்குப் போவேன். எனக்கு உபாத்தியாயினி வேலையோடு அல்லாமல் டாக்டர் வேலைக்கும் போகவேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. உபாத்தியாயினி வேலைக்குப் போகாவிட்டால் டாக்டர் வேலைக்குப் போவேன். எனக்கு டாக்டர் வேலை உபாத்தியாயினி வேலை இரண்டுக்கும் போக வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. ஆகையால் இவ்விரண்டு வேலைகளில் ஏதாவதொரு வேலைக்குக் கட்டாயம் போவேன்.

நான் பெரியவனாகப் போன பிறகு டாக்டராகப் போவேன். ஜனங்களுக்கு கெடுதல் செய்யக் கூடிய மருந்தை கொடுக்க மாட்டேன். நோய் நொடிகளை அரை நிமிடத்தில் போக்கக் கூடிய மருந்தை வைப்பேன். அப்போது நிறைய பணம் சேர்ந்தால் ஏழைமக்களுக்கு தானம் செய்வேன். அவர்களுக்கு இலவசமாக சிகிச்சை செய்வேன்.

பிறகு நான் யுத்த வீரனாக வந்து தேசத்திற்கு உதவி செய்வேன். பலம், வீரம், கல்வி பொருந்தியவர்களை யுத்த வீரர்களாகச் செய்வேன். பிறகு ஒரு படையைத் திரட்டிக் கொண்டு மற்ற தேசங்களை வென்று அங்கேயும் தேசசேவை செய்யும்படியாக்குவேன், அதே மாதிரி எல்லா தேசத்தையும் வென்று ஒற்றுமையும் உண்டாக்குவேன்.

ராஜகுமார், வயது 10.

பாலசுப்ரமண்யன், வயது 11.

நாம் பெரியவனாய் ஆனா பிரகு மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். நம் நாட்டை நாம் கட்க வேண்டும். நான் பரியவனால் என்ன செய்வே தெரியும். பம் பம் என்று மேட்டர் விடுவேன். சைக்கில் வண்டி எடுத்து விடுவேன். வேண்டும் பண்டம் சாப்பிடுவேன். நான் கட்டாயமாக ஏரோப்பிலேன் விடுவேன். பகல் முழுதும் சுற்றுவேன். எந்த வுர்க் வேணுமானால் போவேன். பெற்றோர்களை எதிர்த்துப் பேசினால் துன்பம் ஏற்படும். அப்பொழுது நான் அமெரிக்காவில் இருப்பேன். செந்தக்காரர் யிருந்தால் லெட்டர் எழுதுவேன். அவர்களுக்கு அர்ஞ்சண்டாய் வேலை யிருந்தால் செந்தகார் விட்டில் வந்து விடுவேன்.

நான் பெரியவனாக பிறகு என்னுடைய தகப்பனாருடைய இருப்பு தெழில் சாலையை வைத்துக் கொண்டு, இருப்பேன். அதில் நான் முதலாளியாக ஆவேன். இரும்பை பண்ணி ஏத்துவேன். இரும்பை பர்னஸ்சிலுருந் எடுப்பேன். M. S. கச்சேரி வைப்பேன்.

பிறகு அதை விட்டு விட்டு என்னுடைய தாத்தா காலேஜில், கல்வி சொல்லி தருவேன். சம்பளம் வாங்குவேன். நான் தானதர்மம் செய்வேன். பிறகு அதையும் விட்டு விட்டு ஏரோப்பிளேன் பயலட் ஆவேன். அதில் எனக்கு அதிக சம்பளம் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு நான் ஒரு பெரிய கம்பெனி ஏற்படுத்துவேன். கடைசியில் எல்லாவற்றியும் வித்துவிடுவேன். சுகமாக வாழ்வேன்.

பவழ வல்லி

கி. ரா.

1

குழலோசை

'டண்! டண்! டண்!' என்று மணி வேகமாக அடித்தது. பள்ளிக்கூடத்திலிருந்து பையன்கள் குதிபோட்டுக் கொண்டு கும்பல் கும்பலாக வெளியே வந்தார்கள்.

கடைசியாகத்தான் சுந்தரம் வெளியில் வந்தான். அதற்குக் காரணம், அவனை மட்டும் கணக்கு வாத்தியார் வகுப்பு விட்டபிறகு ஐந்து நிமிஷம் பெஞ்சு மேல் நிற்கவைத்து, எல்லோரும் போன பிறகுதான் அனுப்பினார். அவன் கணக்குப் போடவில்லை. அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"எனக்கு மட்டும் தூர்வாச ரிஷியைப் போல் சபிக்க முடிந்தால், அந்த 'ரெட்டைமண்டை'யை அப்படியே எருமைக் கன்றுக் குட்டியாகச் சபித்திருப்பேன்" என்று தனக்குள்ளாக நினைத்துக்கொண்டான். "ரெட்டை மண்டை" என்று கணக்கு வாத்தியாருக்குப் பையன்கள் எல்லோரும் சேர்ந்து பேர் வைத்திருந்தார்கள். மற்றப் பையன்களைவிடச் சுந்தரத்துக்கு அந்த வாத்தியாரிடம் இன்னும் கோபம் அதிகம். அவனை அவர் பெயரைச் சொல்லியே கூப்பிடுவதில்லை. "ஏ வணீ!" என்றும் "ஏ கோர்க்காலி!" என்றுந்தான் கூப்பிடுவார். ஏனென்றால், அவன் உயரமாய் இருக்கிறானாம்!

பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்த சுந்தரம் ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி வந்தான். வருகிற வழியில் சந்தியம்மன் கோவிலுக்குப் பக்கத்தில் அவனுடைய வகுப்புப் பையன்கள் இரண்டு மூன்று பேர் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவனை கந்தன்,

"டேய்! இதோ பாரடா, பள்ளிக்கூடம் பெருக்கிட்டு வரான்" என்றான். இன்னொரு பையன், "அது ஒட்டைச் சிவிங்கியில்லேடா, பெஞ்சு மேலே நின்னு மேஞ்சுட்டு வருது!" என்றான். எல்லாப் பையன்களும் சிரித்தார்கள். அவனுக்கு அவமானமாய் இருந்தது அழுகை அழுகையாக வந்தது.

"என் அண்ணன் கிட்டச் சொல்லி உங்களை உதைக்கச் சொல்லுகிறேன், பார்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல் வீட்டை நோக்கி ஓடினான்.

"டே! சிவிங்கி! விடாதேடா! சிவிங்கி!" என்று பையன்கள் கூவுவது அவன் காதில் விழுந்து கொண்டேயிருந்தது.

சுந்தரம் வீட்டுக்குள் நுழையும்போது அவனுடைய தாயார் குழாயடியில் பாத்திரம் தேய்த்துக்கொண்டிருந்தாள்.

"உள்ளே, அடுப்பு மேலே காபி வைத்திருக்கிறேன். ஜாக்கிரதையாக எடுத்துக் குடி!" என்றாள், அவனைக் கண்டதும்.

அவன் மெதுவாக உள்ளே போனான். வெளியில் வெளிச்சத்திலிருந்து வந்ததால் கண்ணுக்கு ஒன்றுமே தெரியவில்லை. அப்போது "படார்!" என்று சத்தம் கேட்டது. காலில் பட்டு ஒரு பாத்திரம் கீழே உருண்டது.

அவன் குனிந்து என்னவென்று பார்ப்பதற்குள் அம்மாவின் கோபக் குரல் கேட்டது. "ஏண்டா சனியனே! பார்த்துப்போ, பார்த்துப்போ என்று எத்தனை தடவை சொல்லுவது! மோரைக் கொட்டித் தொலைத்து விட்டாயே! இப்படி நீளக் காலை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் கொட்டி விடுகிறாயே!" என்றாள்.

ஒருவிதமாகக் காபியைக் குடித்துவிட்டு அவன் திண்ணைக்கு வந்தான். அங்கே அங்கச்சி விளையாடிக்கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி ஏராளமான பொம்மைகள் கிடந்தன. ஏரோப்ளேன், தலையாட்டி செட்டியார், தகர பம்பரம், ஆலிலைக் கிருஷ்ணன் எல்லாம்.

அப்போதுதான் பார்த்தான். அவனுடைய காந்தி பொம்மையையும் அல்லவா அவள் கையில் வைத்திருந்தாள்! உடனே ஓடிப் போய், தன் பொம்மையை வெடுக்கென்று பிடுங்கினான். அவ்வளவுதான்! 'வீல்!' என்று அவள் ஸ்வரம் பாடத் தொடங்கி விட்டாள்!

அங்கச்சி குரல் கேட்டால் உடனே எங்கிருந்தாவது அண்

ணன் பாலு வந்துவிடுவான். பாலு இல்லாவிட்டால் அப்பா வந்துவிடுவார். அவர்கள் இருவரும் வீட்டில் இல்லாவிட்டால் அம்மா கட்டாயமாக வருவாள். யார் வந்தாலும் அங்கச்சிக்குப் பரிந்துகொண்டு தான் பேசுவார்களே தவிர அவனுக்காக யாருமே பேசமாட்டார்கள்.

இந்தத் தடவை பாலு தான் வந்தான். வந்ததும் அவனுடைய கையில் இருந்த பொம்மையை வெடுக்கென்று பிடுங்கினன். சுந்தரம், "இது என்னுடையது; நான் கொடுக்கமாட்டேன்!" என்ருன். பாலுவா விடுபவன்?

"சின்னப் பாப்பா! கொடுடா, குழந்தையிடம்!" என்ருன்.

"நான் மாத்திரம் குழந்தை இல்லையோ?" என்ருன் சுந்தரம். அதற்குப் பதில் அவன் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. கையிலிருந்த காந்தி பொம்மை போய்விட்டது. அவ்வளவுதான்.

சுந்தரத்துக்குக் கோபம் கோபமாக வந்தது. அப்போது தான் உள்ளே நுழைந்த அப்பாவிடம் நடந்ததைச் சொன்னன். அப்பாவும் அவனையேதான் கோபித்துக்கொண்டார்.

"பனைமரம் மாதிரி வளர்ந்துவிட்டாய்! இன்னும் பொம்மை வைத்துக்கொண்டு விளையாடுகிருயாக்கும்! சீ, போ!" என்று ஒரேயடியாக அப்பா விரட்டிவிட்டார்.

சுந்தரத்துக்கு அழுகை அழுகையாக வந்தது. அங்கே நிற்கவே பிடிக்கவில்லை. அந்த வீட்டை விட்டே போய்விட வேண்டும் என்று தோன்றிற்று.

பின் தோன்ருதா? அந்த வீட்டில் அவனிடம் யாருக்குப் பிரியம்? எல்லாருக்கும் அங்கச்சிதான் செல்லம்! 'குழந்தையாம் குழந்தை! எனக்கு மட்டும் எத்தனை வயசாகிவிட்டது! அவளைவிட மூன்று வயசுதானே அதிகம்!' என்று நினைத்தான்.

மனசில் வருத்தமும் கோபமும் மாறி மாறித் தோன்ற, அவன் தெரு வழியே நடந்து போனன். அவனுக்கு எங்கே

போகிறோம் என்றே தெரியாது. அம்மாவோ அவனை எதற்கு எடுத்தாலும் குற்றம் சொன்னாள். அப்பாவோ எப்போதும் "நாயே!" என்று பல்லைக் கடித்தார். அண்ணா பாலுவோ, கன்னத்தில் அடித்தான்! 'எல்லாரும் அந்த அங்கச்சியையே வைத்துக்கொண்டு கொஞ்சட்டும். நான் எங்கேயாவது போய்விடுகிறேன்' என்று எண்ணிக்கொண்டே கால் போன வழியாக நடந்தான்.

அவனுக்கு எதிரில் படையென்று கூட்டம் கூட்டமாக ஜனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள். அப்போதுதான் அவன் நன்றாகச் சுற்றிலும் கவனித்துப் பார்த்தான். அவனையும் அறியாமலே சமுத்திரக் கரைக்கு வந்துவிட்டான்.

"பலூன் காலணா! பலூன் முக்காலணா!" என்று ஒருவன் விற்றுக்கொண்டே போனான். அவனைக் கவனித்துக் கொண்டே நின்றான் சுந்தரம். அவனிடம் காசு இல்லை. இருந்தால் பலூன் வாங்கலாம். பெரிய சுரைக்காய் மாதிரி ஒரு பலூன். அது ரொம்ப அழகாய் இருந்தது.

அதைப் பார்த்துக்கொண்டே கூட்டத்தையெல்லாம் கடந்து தண்ணீர் ஓரமாக வந்து விட்டான். ஒரு படகுக்கு அடியில் உட்கார்ந்துகொண்டு எதிரில் துள்ளித் துள்ளி அவனை நோக்கி ஓடிவந்த அலைகளைப் பார்த்தான்.

அதென்ன அது? அலைகளுக்கு எல்லாம் அப்பால், தண்ணீர்க் கோடு ஆகாயத் தோடு சேரும் இடத்தில், ஏதோ சிவப்பாகத் தெரிகிறதே! என்ன அதிசயம்! வெண்ணெயைப் போல் வெண்மையாய், உருண்டையாய் ஏதோ ஒன்று தண்ணீருக்குள்ளிருந்து வெளியே எட்டிப் பார்த்தது.

அடேடே! அது என்ன சந்திரனா! அன்று பௌர்ணமியா! எவ்வளவு அழகாய் இருந்தது சந்திரன்! அதைப் போய்த் தொட்டுப் பார்க்க வேண்டும்போல் தோன்றிற்று அவனுக்கு.

அவன் மனம் கற்பனையில் இறங்கியது. அப்படியே பாய்ந்து அந்தச் சந்திரலோகத்துக்குப் போய்விட்டால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? அங்கேயுள்ள ஜனங்கள் அவனைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். ஒருவேளை அவனையே ராஜாவாக முடிசூட்டினாலும் சூட்டிவிடுவார்கள். அது மட்டுமா? அந்த ஊர் ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூடக் கேட்பார்கள். அவன் என்ன சொல்லுவான்?

அவன் தன் உடம்பு அசதியாயிருப்பதை உணர்ந்தான். அப்படியே மணலில் சாய்ந்துகொண்டான். சற்று நேரத்தில் இரண்டு கொட்டாவி விட்டான். அவ்வளவுதான். ஐந்து நிமிஷங்களில் தூங்கத் தொடங்கினான்.

இருந்தாற்போலிருந்து புல்லாங்குழலூதும் இனிமை

யான ஓசை கேட்டது. சட்டென்று சுந்தரம் விழித்து எழுந்தான். அவன் காதில் அந்த இசை இன்னும் இனிமையாக விழுந்துகொண்டே யிருந்தது.

'இதென்ன, சொப்பனமோ?' என்று நினைத்தான். கண்ணைக் கசக்கிவிட்டுக் கொண்டான். கனவு இல்லை. நிஜமாகவேதான் புல்லாங்குழல்.

இது என்ன அதிசயம்! எதிரில் ஓர் அபூர்வக் காட்சியைக் கண்டான். சமுத்திரத்தின் அலைகளுக்கு மேல் இன்னொரு சந்திரனைப்போல் ஒரு பிரகாசம் தெரிந்தது. வெள்ளியால் செய்ததைப் போல் ஒரு தாமரைப்பூ மின்னிற்று. அதற்குமேல் நாலைந்து பெண்கள், தேவலோகத்து அப்சரப் பெண்களைப் போல் அழகாக ஆடிக்கொண்டிருந்தார்கள். ஏதோ புரியாத பாஷையில் பாட்டும் பாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய குரல் எவ்வளவு இனிமை! ஜலதரங்கம் வாசிப்பதைப்போல் கேட்டது. பல வர்ணக் கற்களால் செய்த ஆபரணங்களை அவர்கள் அணிந்திருந்தார்கள். அவை பார்ப்போர் கண்ணைக் கூசவைத்தன. ஆனால் அவர்கள் எல்லாருமே மிகவும் குள்ளமாக இருந்தார்கள்.

அவர்கள் யார் என்று கேட்கச் சுந்தரத்துக்கு அவகாசம் இல்லை. 'ஏன் அப்படி ஆடினார்கள்? அவர்கள் பாடும் பாஷை என்ன?' என்ற கேள்விகளையெல்லாம் பற்றி அவன் நினைத்துப் பார்க்கவில்லை.

சமீபத்தில் போய் அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் கிட்ட நெருங்கினான். முன்னால் நின்ற ஒருத்தி அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்ததைப்போல் இருந்தது.

அவளுடைய நீண்ட கூந்தல் பாதம் வரையில் தொங்கியது. அவளுடைய மேலாடையில் நட்சத்திரங்கள் மின்னின. அவளுடைய தலையில் வளையமான ஒரு நீலக் கல் கிரீடம் பளபளத்தது. எல்லாவற்றையும் விட, பாஷை புரியாத அவளுடைய பாட்டில் ஒலித்த குளுமையும் இனிமையும் தான் அவனைக் கவர்ந்து இழுத்தன.

அந்த அதிசயப் பெண்களை நோக்கித் தன்னையும் அறியாமல் அவன் போய்க்கொண்டிருந்தான். வரவரத் தன் கால்கள் தண்ணீருக்குள் மூழ்குவதைக் கூட அவன் உணரவில்லை. தண்ணீர் மேலே ஏறிக்கொண்டே வந்தது அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்குச் சுயநினைவே இல்லை. அந்த இனிமையான பாட்டுக் குரல் மட்டும் காதில் கேட்டுக் கொண்டே யிருந்தது. வரவரப் பாட்டுக் குரலும் மங்கிக் கொண்டே வந்தது. கடைசியில் அதுவும் நின்றுவிட்டது.

(தொடரும்)

பொம்மை மனுஷன்

உங்களிடம் பெரிய கைக்குட்டை இருக்கிறதா? அப்பா வைத்திருக்கிறாரே, அவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும். சரி; அப்படியானால் அதை எடுத்துக்கொண்டு இரண்டு பேர் முன்னால் வாருங்கள். ஒரு பக்கத்து நுனியில் ஒரு முடிச்சுப் போட்டுக்கொள்ளுங்கள். அதை ஆள்காட்டி விரலினால் பிடித்துக்கொண்டு, படத்தில் காட்டியிருக்கிறதைப் போலக் கையை மூடிக்கொள்ளுங்கள். பிறகு கட்டை விரலையும் நடு விரலையும் பிரித்துக் கைகள் மாதிரி செய்துகொள்ளுங்கள். ஆயிற்று? அப்புறம் இடது கையினால் கைக்குட்டையை மூடி இழுத்துப் பிடித்துக்கொண்டால் உடம்பு போலவே இருக்கும். இப்பொழுது பார்த்தால், அசல் பொம்மை மனுஷன்தான்! அந்தப் பொம்மை மனுஷர்களில் உயரமாயிருப்பது தேவர்; குள்ளமாய் இருப்பது கோனார். இப்பொழுது இரண்டு பேரும் சந்தித்துப் பேசுகிறார்கள்.

(பேசும்போது, பேச்சுக்குத் தகுந்தமாதிரி பொம்மை மனுஷனை ஆட்டி நடிக்கவேண்டும்! யார் நடிக்கும்போது மற்றப் பையன்கள் ரொம்பச் சிரிக்கிறார்களோ, அவன்தான் கெட்டிக்காரன்.)

தேவர்: வாங்க, வாங்க, கோனாரே! சௌக்கியமா? (கிட்ட நெருங்கி) ஏன் முக வாட்டமா இருக்கீங்க?

கோனார்: (கையைப் பிசைந்துகொண்டு) என் மாடு ஒண்ணு எங்கேயோ காணாமல் போயிட்டுதுங்க!

தேவர்: அட, மாட்டையா காணோம்! சிவப்பு மாடா?

கோனார்: ஆமாங்க தேவரே!

தேவர்: சின்னதாய் இருக்கும் கொம்பு; இல்லே?

கோனார்: அதேதான்! சொல்லுங்க, சொல்லுங்க!

தேவர்: நான் சொல்ற மாதிரிதானே இருக்கும்?

கோனார்: அப்படியேதான் இருக்கும். சட்டுனு சொல்லுங்க. எங்கே பாத்தீங்க அந்த மாட்டை?

தேவர்: அதேபோலச் சிவப்பா, சின்னக் கொம்போடு ஒரு மாடு வாங்கணும்னு எனக்கு ரொம்ப நாளா எண்ணம். அதுக்குலலே கேட்டேன். உங்க மாட்டை நான் பாக்கலியே!

கோனார்: சரியாப் போச்சு; போ, ஐயா! (கோபத்துடன் பின்னால் திரும்பிப் போகிறார்.)

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இது மற்றச் சங்கங்களைப்போல் அல்ல; புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும்.

இதோ இந்த இதழிலேயே ஒரு பரிசுப் போட்டி இருக்கிறது. இதில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே பங்கு எடுத்துக்கொள்ளலாம். மற்றவர்கள் இதில் கலந்துகொள்ள முடியாது.

இதில் உடனே சேரவேண்டுமென்று உங்களுக்கு ஆசையாக இல்லையா? சேருவது மிகவும் சுலபம். இந்தப் பக்கத்திலேயே ஒரு கூபன் இருக்கிறது. இதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்களுக்கு இனமாக எனமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். ஒரு விஷயம்: இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் முக்கியம்.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

ஜனவரி '50

211775

சமர்த்து மைனு

தி. ஜ. ர.

குக்ஷவீ - குக்வீ - க்வீ க்வீ!

ஓ! இதென்ன இனிமையான குரல்? எங்கிருந்து வருகிறது?

அதோ அந்த இலவ மரத்திலிருந்துதான் இது வருகிறது. சித்திரக்கோலம் மாதிரி பூ; அதே மாதிரி இலை. இவைகளுக்கு நடுவே உட்கார்ந்திருக்கிறதே ஒரு குருவி; அது பாடுகிறது. அருமையான பாட்டு; ஆனந்தமான பாட்டு.

அதுதான் சமர்த்து மைனு. அநுபவித்துப் பாடுகிறது. பெரிய பாடகர்களைப் போல் தலையைத் தலையை அசைக்கிறது. அதற்குக் கை கிடையாது; கைக்குப் பதிலாகச் சிறகை உலுக்குகிறது. பரவசமாகப் பாடுகிறது.

ஏன் தெரியுமா?

சமர்த்து மைனுவுக்கு இன்று கல்யாணம். அதனால் தான்.

அப்பா, அம்மா இரண்டும் வந்துவிட்டன.

"மகனே, நீ பெரியவன் ஆகிவிட்டாய். போய் உனக்குப் பிடித்தமான பெண் பார்த்துக் கொள். கல்யாணம் செய்து கொள். கூடு கட்டிக்கொள். சந்தோஷமாக வாழ்" என்று அம்மா ஆசீர்வதித்தது.

"ஏன், அம்மா? நீ என் கல்யாணத்துக்கு வரமாட்டாயா?" என்று சமர்த்து மைனு கேட்டது.

"இல்லை மகனே, நானும் அப்பாவும் வரமாட்டோம். அது நம் இனத்தில் வழக்கம் இல்லை. கல்யாணம் ஆகாத ஆண்கள், கன்னிகள், கணவனை இழந்த பெண்கள், மனைவியை இழந்த ஆண்கள் - இந்த மைனுக்கள் மட்டுமே சுயம்வரத்துக்கு வரலாம்; புருஷனும் மனைவியுமாக இருக்கும் மைனுக்கள் வருவதில்லை. நீ மட்டுந்தான் போகவேண்டும்" என்று அம்மா சொல்லிவிட்டது.

சமர்த்து மைனுதானே மாப்பிள்ளை; அது புறப்பட்டது. சுயம்வரம் நடக்கும் இடத்துக்குப் போயிற்று.

அங்கே ஒரு வீடு. அது யார் வீடோ தெரியாது. அதன் கூரைமேல் சுயம்வரம் நடந்தது.

பல பெண் மைனுக்கள் வரிசையாக உட்கார்ந்திருந்தன. அவைகளுக்குத்தான் சுயம்வரம்.

மாப்பிள்ளை மைனுக்களெல்லாம் கீழே பெரிய 'டூர்ன

மெண்ட்' தொடங்கின; பாட்டுப் போட்டி, மல்யுத்தம் எல்லாம் நடத்தின. பெண் மைனுக்கள் நிம்மதியாக உட்கார்ந்து, கவனமாக வேடிக்கை பார்த்தன.

ஒரு மாப்பிள்ளை மைனு பாடியது; மற்றென்று போட்டிப் பாட்டுப் பாடியது. ஒன்று மெல்ல மெல்ல உல்லாசமாக நடந்தது. இரண்டு மல்யுத்தம் நடத்தின; கொத்தின; சிற கடித்துப் பாய்ந்தன.

சமர்த்து மைனு மெல்ல மெல்ல நடந்தது. பெண்களை யெல்லாம் பார்வையிட்டது. பாடியது. சண்டை போட்டது. உக்கிரமான சண்டை தான்.

ஊரிலே வேடிக்கை என்ருல், பார்க்க எல்லாருக்கும் ஆசைதானே? காசு கொடுத்து, டிக்கட் வாங்கிவிடுவார்கள். போய்ப் பார்ப்பார்கள். திருட்டுக் காக்கை அப்படிச் செய்யுமா?

காக்கைகளை யாரும் அழைக்கவும் இல்லை; அவைகள் டிக்கட் வாங்கவும் இல்லை. தாமாகவே வந்துவிட்டன. வரிசையாக உட்கார்ந்து வேடிக்கை பார்த்தன.

பாட்டும், கூத்தும், சண்டையும் ஒரே அமர்க்களந்தான். சண்டை போட்ட மைனுக்களின் சிறகுகள் அங்கும் இங்கும் சிதறின. அலகுகளால் ஒன்றை ஒன்று கொத்தின; சிறகுகள் கிளம்பிப் பறந்து விழுந்தன. மைனுவின் அலகு நல்ல உறுதி.

காக்கைகளுக்கே குறும்பு அதிகம். அவைகள் மரியாதையாக வேடிக்கை பார்த்து விட்டுப் போகுமா? சண்டை போடுகிற மைனுக்களுக்குப் பின்னுல் போய்க் குறும்பு செய்தன.

குறும்புக்காரப் பெண்ணும் பையனும் என்ன செய்வார்கள்? கல்யாணப் பெண்ணின் பின்னலில் கல்லைக் கட்டிவிடுவார்கள்; மாப்பிள்ளையின் சட்டைக்கும் பெண்ணின் சேலைக்கும் முடி போட்டு விடுவார்கள்.

காக்கைகளும் இந்த மாதிரி தான். சண்டை போடும் மைனுக்களுக்குப் பின்னுல் போயின. தெரியாமல் அவைகளின் வாலைப் பிடித்து இழுத்தன. சண்டை மும்முரத்தில் இதை மைனுக்கள் கவனிக்கவில்லை. கவனித்தால் சும்மா விடுமா?

சமர்த்து மைனு வீராவேசமாகச் சண்டை போட்டது. அதன் வாலையும் ஒரு காக்கை இப்படித்தான் இழுத்தது. உடனே அது குக்ஷவீ - க்வீ குஷ்' என்று ஆத்திரத்தோடு திரும்பியது. அப்போது பார்க்க வேண்டுமே காக்கையை! 'செத்தேன், பிழைத்தேன்!' என்று பறந்தோடியது. மைனுவிடம் காக்கைக்கு அவ்வளவு பயம். மைனு மிகவும் வீரமுள்ள பட்சி. மற்றக் காக்கை, குருவிகளையெல்லாம் மைனு விரட்டி விடும்.

சமர்த்து மைனுவின் நடை, பாட்டு, சண்டை எல்லாம் ஒரு பெண் மைனுவுக்கு ரொம்பவும் பிடித்தன. அது இதைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்தது. இதற்கும் அதனிடம் பிரியம் உண்டாயிற்று. கல்யாணம் நடந்தது.

ஜாகை வேண்டாமா? சமர்த்து மைனு இடம் தேடப் புறப்பட்டது.

மனிதரின் வீடுகளுக்குள், காக்கை, பருந்து போன்ற பட்சிகள் வந்து வசிப்பதில்லை. அவைகளுக்குப் பயம். மைனுவுக்கு அந்தப் பயமெல்லாம் கிடையாது. அது எங்கே வேண்டுமானுலும் உரிமையோடு நுழைந்துவிடும். மனிதர் கண்டால், மருண்டு ஓடாது. காக்கை அப்படி இல்லை. அது தந்திரமாக வரும். மனிதர் கண்டால் அசடு தட்டிவிடும். திறுதிறு என்று விழிக்கும்; தவிக்கும்; தப்பித்தோடச் சந்து தேடும்.

சமர்த்து மைனு ஒரு வீட்டுக் குள்ளே புகுந்தது. ஒரு மூலை

யில் இடம் பிடித்தது. வீட்டுக்காரரிடம் அது குடிக்கூலி பேசவில்லை; அட்வான்ஸும் கொடுக்கவில்லை. அதுவும் பெண் மைனாவும் சேர்ந்து கூடு கட்டின.

மைனா அருமையாகக் கூடு கட்டும். கூடு கட்டுவதிலே அதற்கு வெகு ஆனந்தம்.

சமர்த்து மைனாவும் மனைவி மைனாவும் எங்கெங்கோ போய், என்ன என்னவோ சாமான்களைக் கொண்டுவந்தன. குச்சி, சிறகு, கந்தை, எலும்பு, காகிதத் துண்டு எல்லாம் கொண்டு வந்தன. மைனாவின் கூடு ஒரு பெரிய மியூஸியந்தான்! இவைகளையெல்லாம் கொண்டு கூடு கட்டின. கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டும்போதே, அவைகளுக்குச் சந்தோஷம் வந்துவிடும். அவைகள் ஓய்வு எடுத்துக்கொள்ளும்; பாடும். மறுபடியும் வேலை தொடங்கும். கூட்டைக் கட்டி முடித்தன. பாம்பு உரித்த சட்டையும் பஞ்சும் கொண்டு மெத்தென்று படுக்கை செய்தன. இன்பமாகக் குடித்தனம் நடத்தின.

மனைவி மைனா நாலு முட்டைகள் இட்டது. குஞ்சு பொரித்தது. குஞ்சுகளிடம் இரண்டு மைனாக்களும் மிக அன்பாக இருந்தன. இரண்டும் வெளியேபோய் இரை தேடின. புல்வெளியில் கிளறிப் பூச்சி புழுக்களைக் கொத்தும். ஒரு மாடு நடந்தால், அதன் பின்னாலேயே தத்தித் தத்திப் போகும். மாட்டின் காலடியில் மிதிபடாமல் தப்ப முயலும், சில பூச்சி புழுக்கள். அவைகள் இந்த மைனாக்களிடம் அகப்பட்டுக் கொள்ளும். அந்தப் பூச்சி புழுக்கள்தான் மைனாவின் உணவு.

அகப்படும் உணவுகளை எல்லாம் அப்பா மைனாவும் அம்மா மைனாவும் தாங்களே தின்றுவிடுவதில்லை. குஞ்சுகளுக்கு இரை வேண்டாமா? உணவுகளை இரண்டும் குஞ்சுகளுக்குக் கொண்டு வந்து தரும். அப்போது, இரண்டுக்கும் சண்டைகூட வந்துவிடும். ஒரு பூச்சி, அம்மா மைனாவிடம் அகப்படும். "குஞ்சுகளுக்கு நான்தான் கொடுப்பேன்" என்று சொல்லி, அதை அப்பா மைனா பிடுங்க வரும். "முடியாது" என்று

அம்மா மைனு மறுக்கும். இரண்டுக்கும் சச்சரவு மூளும். கடைசியில் இரண்டும் சமா தானம் ஆகிவிடும்.

குஞ்சுகளை இரண்டும் மறப் பதேயில்லை. வெளியே போனால் அடிக்கடி திரும்பி வரும். குஞ்சுகளைச் சீராட்டும். குஞ்சுகளுக்கு இறக்கைகள் முளைத்தன. அவைகளால் நன்றாய்ப் பறக்க முடிந்தது. அதுவரைக்கும் அவைகளை அப்பா மைனுவும் அம்மா மைனுவும் காப்பாற்றின.

குஞ்சுகளில் அசடு ஒன்று இருந்தது. அது ஒரு நாள் எங்கேயோ வெளியில் போயிற்று. அப்புறம் திரும்ப வில்லை.

"அசடு என்றாலும் நம் குஞ்சுதானே. ஐயோ! யாரோ மனிதன்தான் அதைப் பிடித்துக்கொண்டு போய்விட்டான். அவன் அதற்கு நல்ல பூச்சி, புழு எல்லாம் போட மாட்டானே. மாவுதானே போடுவான். கூண்டில் அடைத்து விடுவானே. மனிதப் பேச்சு ஏதாவது கற்றுக் கொடுப்பான். உபயோகமில்லாத பேச்சு! பேசிப்பேசித் தானே மனிதன் கெட்டுப் போகிறான். வெறும் பேச்சு எதற்கு?" என்று அப்பா மைனுவும் அம்மா மைனுவும் வருத்தப்பட்டன.

மற்றக் குஞ்சுகளெல்லாம் நன்றாக வளர்ந்துவிட்டன.

"மக்களே, இனி நீங்கள் உங்கள் இஷ்டப்படி வெளியே போங்கள். கல்யாணம் செய்து கொள்ளுங்கள். சமர்த்தாக வாழுங்கள்" என்று அம்மா மைனு விடை கொடுத்தது.

"நானும் வாழ்த்துகிறேன். அசட்டுக் குஞ்சு போல நடக்காதீர்கள். புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுங்கள். நம் இனத்தாருக்கு, பன்னிரண்டு வருஷம் ஆயுசு. நீங்களெல்லாம் சுதந்தரத்தோடு மணவியும் மக்களுமாய்த் தீர்க்காயுசு வாழ வேண்டும்" என்று சமர்த்து மைனுவும் ஆசீர் வதித்தது.

குஞ்சு மைனுக்களெல்லாம் மனத்திலே தீரமும், நெஞ்சிலே களிப்பும், உடலிலே சுறுசுறுப்பும், நாவிலே பாட்டுமாகப் பறந்தோடின.



படேலும் பே க் குழந்தையும்

குழந்தை - படேல்

கிராமத்துக் குழந்தைதான் உற்சாகமாக வளரும். அப்படியே நான் வளர்ந்தேன்; சிரிப்பும் களிப்பும் குறும்புமாக வளர்ந்தேன்.

பள்ளிக்கூடத்தில் என் வாத்தியார் ஒருவர் எப்போதும் லேட்டாக வருவார். அவரை நையாண்டி செய்யும்படி நான் பையன்களைத் தூண்டினேன்.

அவர் எனக்குத் தண்டனையாக 'இம்பொஸிஷன்' எழுதச் சொன்னார். அதை எழுதாமலே அடுத்த நாள் வகுப்புக்குப் போனேன். "நாளைக்கு இரண்டு மடங்கு அதை எழுதி வா" என்று அவர் கட்டளையிட்டார். மறுநாளும் நான் எழுதிக் கொண்டு போகவில்லை. அன்றும் அவர் முன்னை விட இரண்டு மடங்கு எழுதிக் கொண்டு வரச்சொன்னார். இப்படியே ஒவ்வொரு நாளும் இரண்டு மடங்காக்கிக் கொண்டே வந்தார். கடைசியில் ஒரு நாள் 200 மடங்கு எழுதிவரச் சொன்னார்.

அன்று என் ஸ்லேட்டில் '200' என்ற எண்ணை மட்டும் எழுதிக்கொண்டு போனேன். மிகவும் நல்ல பையனைப்போல, அதை வாத்தியாரிடம் நீட்டினேன்.

"பாடாக்கள் எங்கே?" என்று வாத்தியார் கேட்டார்.

"நான் 200 மட்டுமே எழுத முடிந்தது. பாடாக்கள் ஓடிப் போய்விட்டன, ஸார்" என்றேன்.

'பாடா' என்றால், குஜராத்தியில் 'கணக்கு' என்று ஓர் அர்த்தம்; 'எருமை மாடு' என்று இன்னோர் அர்த்தம்.

வாத்தியாருக்கா ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. என்னை ஹெட்மாஸ்டரிடம் கொண்டு போய் நிறுத்தினர். அவர் என்னைத் தண்டிக்கவில்லை; "வீட்டுக் கணக்கு இப்படியா கொடுக்கிறது?" என்று வாத்தியாரையே கோபித்துக் கொண்டார்.

குழந்தைப் பருவத்துக் குணங்கள் தான் கடைசிவரைக்கும் இருக்கும். இன்று எனக்குள்ள திடகாத்திரத்துக்கும் குணங்களுக்கும் என் குழந்தைப் பருவமே காரணம்.

வாழ்க்கையைப்பற்றி அநாவசியமாகக் கவலைப்படாமல் இருக்கவேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவிக்கவேண்டும். இந்த மனோபாவத்துடனே நான் வளர்ந்தேன். சில வருஷங்களுக்குமுன் வரையில் கூட என் பேரனுடன் குத்துச் சண்டை போட்டு விளையாடுவேன். இப்போது மட்டும் என்ன? நான் சிறுவர்களுடன் விளையாடி உற்சாகம் பெருமல் இருப்பதில்லை.

இன்று இருப்பதைவிட, முன்போல் குழந்தையாகவே இருந்தேனுனல் எவ்வளவு இன்பமாய் இருக்கும்!

—சாதார் படேல், சங்கர்ஸ் வீக்லி.

அப்பாவின் பாக்கி

'தம்பி'

கிட்டுவும் மணியும் பந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்பா மிகவும் உரக்க, "மணி, மணி" என்று கூப்பிட்டார். மணி அவரிடம் போனதும், நடைப்பாதையை நன்றாகப் பெருக்கும்படி அவனிடம் சொன்னார்.

இதுமாதிரி வேலைகள் பலவற்றை அவர் அடிக்கடி கிட்டுவுக்கும் மணிக்கும் தருவது உண்டு. அவன் வயசுள்ள மற்றக் குழந்தைகள் சாதாரணமாகச் செய்யாத காரியங்களை அவர் செய்யச் சொல்லுவார். சில சமயம் மிகவும் கஷ்டமான வேலைகள் இடுவார்.

தம் தகப்பனார் சொல்வது போல் எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றுவது அவர்களுக்குச் சிரமமாய் இருந்தது. நகங்களை அழுக்குப் படாமல் வைத்துக்கொள்ளுதல், சட்டையைத் தினமும் தோய்த்தல், புத்தகங்களில் கிறுக்காமல் இருப்பது போன்ற மிகவும் கஷ்டமான கட்டளைகளை அவர்கள் வெறுத்தார்கள்.

அதோடு மட்டுமல்ல. பக்கத்து வீட்டு ராமுவின் தகப்பனார் ராமுவைக் கூப்பிட்டு வீட்டைப் பெருக்கச் சொல்ல மாட்டார்; அவன் புத்தகத்தைக் கிழிக்காமல் இருக்க வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கமாட்டார். மேலும் அவர்கள் வீட்டில் வேலைக்காரன் இருந்தான். அவன்தான் வீட்டைப் பெருக்குவான்; துணி தோய்ப்பான். ஆனால் ஒரு விசேஷம்: அவன் துணி தோய்த்தாலும், வீட்டைப் பெருக்கினாலும் அவனுக்கு லாபம் உண்டு. ஒவ்வொரு வேலையைச் செய்ததற்கும் அவனுக்குப் பணம் கொடுத்தார்கள்.

மணியும் கிட்டுவும்தானா பணம் இல்லாமல் இந்த வேலைகளைச் செய்யவேண்டும்?

இரண்டு பேரும் சேர்ந்து யோசனை செய்தார்கள்.

அதன் பலனாக அடுத்த நாள் காலையில் அப்பாவின் மேஜை மேல் இரண்டு துண்டுக் காகிதங்கள் இருந்தன.

ஒரு காகிதத்தில் இம்மாதிரி எழுதியிருந்தது:

கிட்டுவுக்கு அப்பாவின் பாக்கி

நடைபாதையைப் பெருக்கியதற்கு ..	0—2—0
வீட்டுக் கணக்கைச் செய்ததற்கு ..	1—0—0
சுத்தமாகப் பல் தேய்த்ததற்கு ..	0—3—0
அம்மாவை வெளியே அழைத்துப் போனதற்கு	0—4—0
புஸ்தகம் இரவல் வாங்கி வந்ததற்கு ..	0—2—0
மொத்தம் ரூ.	1—11—0

குறிப்பு: இதற்குப் பதில் எனக்கு ஒரு சிறிய டார்ச் விளக்கு வாங்கித் தந்தால் போதும் - கிட்டு.

இன்னொரு காகிதத்தில் பின் வருமாறு காணப்பட்டது:

மணிக்கு அப்பாவின் பாக்கி

அப்பாவின் செருப்பைத் துடைத்ததற்கு ..	0—2—0
லாண்டிரிக்குப் போனதற்கு ..	0—2—0
விளக்கெண்ணெய் குடித்ததற்கு ..	0—8—0
டியூஷனுக்கு மட்டம் போடாததற்கு ..	0—8—0
நகத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டதற்கு ..	0—4—0
மொத்தம் ரூ.	1—8—0

குறிப்பு: இதற்குப் பதிலாக எனக்கு ஓர் அழகான வர்ணப்பெட்டி வாங்கிக் கொடுத்தால் போதும்.

—மணி

இந்தக் கடிதங்களை அப்பா பார்த்தார்.

மறுநாள் காலையில் மணியும் கிட்டுவும் எழுந்து, படிப்பதற்காகத் தங்கள் புத்தக அலமாரியண்டை சென்றார்கள். அங்கே ஒரு வர்ணப் பெட்டியும் டார்ச்சு விளக்கும் வைத்திருந்தது. அவைகளைச் சுற்றி ஒரு காகிதம் இருந்தது. அதை அவர்கள் இருவரும் பிரித்துப் பார்த்தார்கள்:

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கிட்டு, மணி இரண்டு பேருடைய பாக்கி

பத்திரமாகக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு ..	0—0—0
சாப்பாட்டுக்கும் துணிக்கும் ..	0—0—0
பள்ளிக்கூடம், புஸ்தகம் செலவுக்கு ..	0—0—0
விளையாட்டுச் சாமான்களுக்கு ..	0—0—0
பிரயாணம், சினிமாச் செலவுக்கு ..	0—0—0

குறிப்பு: உங்களை நாங்கள் விரும்பி நேசிப்பதால் இவைகளை உங்களுக்குத் தருகிறோம்.

உங்கள் அருமை

அப்பா, அம்மா.

சிறுவர்கள் இருவரும் அப்பாவைத் தேடி ஓடினார்கள். 'நன்றி', 'சேர்ந்து வாழ்வது' என்ற வார்த்தைகளின் அர்த்தம் அவர்களுக்கு லேசாக உதயமாக ஆரம்பித்தது.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

பெற்றேர்களே!

குழந்தைகளின் ஆசை இது: படிக்க வேடிக்கையாக இருக்க வேண்டும்; உற்சாகம் தரவேண்டும்; குதூகலம் பொங்க வேண்டும்.

பெரியவர்கள் ஆசை இது: குழந்தை படிப்பது நல்லதாக இருக்க வேண்டும்; அறிவு கொடுக்க வேண்டும்; பயனுள்ளதாக இருக்க வேண்டும்.

இந்த இரண்டு ஆசையையும் பூர்த்தி செய்வது '**கண்ணன்**'.

குழந்தைகளுக்காகத் திட்டமிட்டு, குழந்தைகளுக்காகப் பதிப்பித்து, குழந்தைகளுக்கு நன்மை புரிவது '**கண்ணன்**'.

இந்த இதழையே பாருங்கள்:

(1) சுத்தமான அச்சு, பெரிய எழுத்து: குழந்தைகள் கண்ணுக்குச் சிரமமில்லாமல் படிக்கலாம்.

(2) கண்ணன் கழகம், நண்பர்களை வளர்ப்பது.

(3) கதைப் போட்டி: குழந்தைகளுக்கும் கற்பனை உண்டு. அந்தக் கற்பனையை உருவாக்க இது தூண்டுகிறது. அழகாக எழுதும் ஆசையை வளர்க்கிறது.

(4) இந்தியா வருங்காலத்தில் மிகச் சிறந்த நாடாக இருக்கப் போகிறது. இப்போது குழந்தைகளாக உள்ளவர்கள் நாளைக்கு இந்தியாவின் பெரியோர்களாகப் போகிருர்கள். பெரியவர்களுடைய சரித்திரத்தைப் படித்தால், குழந்தைகளுக்கு, அவர்கள் மாதிரி நடக்க வேண்டும், அவர்களைப் போல் ஆகவேண்டும் என்ற ஆசை உண்டாகும். ஜவாஹர்லால் நேருவின் இளம்பருவக் கதை இதில் இருக்கிறது.

(5) மைனுவைப் பற்றி ஒரு கதை இருக்கிறது. ஆனல் அது கட்டுக்கதை அல்ல. மைனுவின் இயல்புகளையும் நடவடிக்கைகளையும் கதைபோலச் சொல்கிறது. பறவை, விலங்கு, மரம் செடி கொடி எல்லாமே இவ்வாறு கதாபாத்திரங்களாக வந்தால், குழந்தைகள் ஆசையோடு படிப்பார்கள்.

(6) குழந்தைகள் எப்போதும் துறுதுறுவென்று இருக்கும். ஏதாவது செய்துகொண்டே இருப்பது அவர்கள் இயற்கை. ஏதாவது புதிதாகச் செய்துவிட்டால் அதில் அவர்களுக்கு உண்டாகும் ஆனந்தம் அளவில்லாதது. புதிய வேலைகளைக் கொடுத்து, இப்படிச் செய்யுங்கள் என்று வழியும் சொல்லிவிட்டால் அவர்கள் குதித்துக் கொண்டே செய்வார்கள். வெட்டி ஒட்டும் படம், செய்து பார் என்ற அம்சங்கள் இந்த வகையில் இருக்கின்றன.

கதைகளோ, பல இருக்கின்றன; அத்தனையும் இனிமையானவை.

'கண்ணன்' குழந்தைகளின் தோழன்: பெரியவர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவன்.

ந்திரவதனமென்றுன் சந்திரன்
நாள் தேய்வான்"
யற்கை அழகில் குறைவிலை எனினும்
யற்கை அழகைச் செவ்வனே செய்வாள்."

—நாமக்கல் கவிஞர்.

ரு அழகிய பெண் கவலையற்று அயர்ந்து தூங்கும் பாழுது அவளுடைய பிரகாசிக்கும் முகம் பூர்ண ந்திரனையே பார்த்துப் பழிப்பதுபோல் இருக்கிறது ன்று கவிஞர்கள் வர்ணிப்பது எவ்வளவு உண்மை! பண்மணிகளின் சந்திரவதனம்போன்ற மேனி ழகுக்கு அவளின் அடர்ந்து படர்ந்த கூந்தலும், ர்ச்சியும் காந்தியுமுடைய கண்களும் ரஞ்சிதமான நற்றியுமே காரணம்.

க்காலத்து நாரிமணிகள் (ஏன் புருஷ மணிகளும் ட) அவர்களின் அழகை அதிகப்படுத்த அடர்ந்து ர்ந்து சுருண்ட கேசவளர்ச்சிக்கு ரூபா டானிக் ஹேர் ஆயிலும், கவர்ச்சியும் காந்தியுமுடைய ண்களுக்கு ஐடெக்ஸ் கண்மையும், ரஞ்சிதமான

சோபையுடன் கூடிய நெற்றிக்கு பிந்தி, வாசனைச் சாந்தும் உபயோகிக்கிறார்கள். இவைகள் பண்டைக்கால சாஸ்திரிய மு அரவிந்த லாபரட்ரீஸாரால் தயாரிக்கப்ப